# சண்முக கவசம்



தேசமான்ய

சிவாகம பூஷணம், வேதாகம மாமணி, சிவாசாரிய சிரேஸ்டர்

அமரர் பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா (J.P.U.M)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயம்
கட்பித்தாவத்தை
(இவ்வாலயம் 1702இல் ஸ்தாபிக்கப்பட்டது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பால செல்வ விநாயகர்

கப்பித்தாவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



தேசமான்ய

சிவாகம பூஷணம், வேதாகம மாமணி, சிவாசாரிய சிரேஸ்டர்

# அமரர் பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா (J.P.U.M)

*பிரதம குரு. ஸ்ரீபால செல்வ விநாயகர் கோயில்,*
*தலைவர் அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்,*
*தலைவர், ஆயுட்கால கௌரவ போசகர் ஸ்ரீ ராமகான சபா,*
*கௌரவ போசகர் ஆலோசர் கதிர்காமயாத்திரை தொண்டர் சபை.*

| தேகவியூகம் | தேகவியோகம் |
|---|---|
| 06 . 11 . 1915 | 19 . 05 . 2012 |

## திதி வெண்பா

நந்தன வருட வைகாசி சதுர்த்தசியில்
அந்தண குல சிரேஸ்டர் சண்முகரட்ண – சர்மா
ஞாலமுடன் பூசனை பலவும் புரிந்த புவியகன்று
பால செல்வ விநாயகர் கழல் கண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசமான்ய

சிவாகம பூஷணம், வேதாகம மாமணி, சிவாசாரிய சிரேஸ்டர்

அமரர் **பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா** (J.P.U.M)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமரர்கள் பா. சண்முகரட்ண சர்மா இராஜலக்ஷ்மி அம்மா தம்பதிகள்
சதாபிஷேகத்தின் போது எடுக்கப்பட்டது
(80 வது வயது பூர்த்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்



சண்முகர்
திருக்கல்யாண
உற்சவம்






முன்னாள் ஜனாதிபதி
சு. பிரேமதாஸ
அவர்கள் கோவிலுக்கு
வருகை தந்த போது....



ஜனாதிபதியாக
பிரேமதாஸ அவர்கள்
பதவியேற்றபோது
விநாயகப்
பெருமானின் ஆசி
வேண்டி இடம்பெற்ற
பூஜையில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கதிர்காம யாத்திரிகர்
தொண்டர் சபை
முன்னாள் தலைவர்
சின்னத்தம்பி
அவர்களுக்கு இடம்
பெற்ற பாராட்டு விழா



பாப்பரசர் 2 வது
அருளப்பர் சின்னப்பர்
இலங்கைக்கு விஜயம்
செய்த போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ராமகானா
சபையின் ராமர்
பிரதிஷ்டா
நிகழ்வு....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2010 தைப் பொங்கல் விழா அலரிமாளிகையில் நடைபெற்ற போது
மேன்மைதங்கிய ஜனாதிபதியுடன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரணில் விக்கிரமசிங்க தேர்தல் போட்டியில் ஆசிவேண்டல்...



சரத்பொன்சேகா இராணுவ தளபதியாக பதவியேற்ற போது ஆசிவேண்டி இடம்பெற்ற பூஜை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய கருங்கல் திருப்பணி ஆரம்ப அடிக்கல் நாட்டு விழா இடம்பெற்று திருப்பணி ஆரம்பிக்கப்பட்ட போது.....




ஆலயத் தலைவர் தவயோகராஜா அவர்கள் கௌரவித்த போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பன் விழாவில் சிறப்பு விருந்தினராகவும் பேச்சாளராகவும் கலந்து கொண்ட போது.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்ப ஆணிவேர்
என்றும் ஒளிரும்சுடர்
பண்பால் பாசத்தால்
உயர்ந்து நின்று
உலகத்திற்கும் அந்தணருக்கும்
சைவம் தழைக்க
அறிவுசார் வழிகாட்டியாக
வாழ்ந்து
அனைவரையும் சமநிலையாக
மதித்து
எம்மையெல்லாம் உயர்த்திய
எங்கள் அன்புத் தெய்வம்
பாலசுப்பிரமணியக் குருக்கள்
சண்முகரட்ண சர்மா
அவர்களின் பாதம் பணிந்து
இவ் மலரினை
சமர்ப்பணம் செய்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

அகத்திய முனிவர் அருளிச் செய்த

# பிள்ளையார் கதை

### காப்பு

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரு மானை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

### கதை

பொன்னிறங் கடுக்கும் புனறரு குடுமித்
தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்
கந்த மும்மதக் கடவுடன் கதையினைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
மந்திர கிரியில் வடபாலாங்கோர்

இந்து தவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிழை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடமணிப் பள்ளியுந் தாம்பல சமைத்துப்

புதல்வரைப் பெறுவரம் புக்கெமக் கருளென
மதர்விழி பாகனை வணங்கிநின் றேத்த
மற்றவர் புரிந்திடு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பொற் சிலை வளைத்துப் புரமெரிப் படுத்த

பரனே யன்பர் பழவினை யறுக்கும்
அரனே மறையவர்க் கருள்புரிந் திடுகென
நச்சுவேல் விழியாய் நங்குடிப் புதல்வர்
இச்சகத் திவர்தமக் கில்லை யென்றலும்
அம்பிகை மனந்தளர்ந் தருவினை யறுக்குந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிரான் திருச் சரணம் வணங்கி
நம்பிநோற் றுலைந்தார் நாயேன் பொருட்டால்
எம்பிரா னேயிவர்க் கின்னருள் புரிகென
மறுத்துமை யுரைத்த மாற்றம் பொறாமற்
கறுத்த வுளத்தொடு கௌரியை நோக்கிப்

பேதாய் நீபோய்ப் பிறவென மொழியக்
காதார் விழியாள் கையற வெய்தி
உருக்குநின் னைந்தெழுத் தோதா தொழியாக்
கருக்குழி வீழக் கடவதோ வென்று
திருத்தாள் வணங்கிச் சிற்றடி யேன்பிழை

அருத்தா நீபொறுத் தருளென மொழியத்
தேங்கமழ் சடையோன் சிறிதே முறுவல்செய்
தாங்குறு துணையா யணுகுவம் யாமென
மீதார் செல்வத்து விண்ணோர் பயந்த
மாதாங் கொல்லென மாத ராகி

ஆர்கலி ஞால மழகுடன் றழைப்பச்
சீர்மலி குழலி திருவயி னுதித்துப்
பாவை சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டளவுமை யாடி வளர்ந்தபின்

எய்தா மகிழ்வுபெற் றீன்ற வியல்பினர்
மானிட மறையோற்கு வதுவை சூட்ட
வாணுத றன்னை மகிழ்வுடன் கேட்கப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கல்ல
தறத்தகு வதுவைக் கணுகலன் யானென

மற்றவன் றன்னை மணமுற வெய்துதல்
பொற்றொடி மடந்தைநிற் கரிதெனப் புகல
அருந்தவ முயற்சியா லணுகுவன் யானெனத்
திருந்து நல்லறஞ்சீர் பெற வமைத்து
மணிமதுக் கமல மலர்த்தடங் குறுகி

அணிமலர்க் குழலி யருந்தவம் புரிய
அரிவைத னருந்தவ மறிகுவன் யானென
இருவரு மறியா விமையவர் பெருமான்
மான் மழு வேந்தும் வண்ணம தொழித்து
மானிட யோகி மறையவ னாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடைதண் டுடன்கிழக் கோலங் கொண்டு
மடமயி றவம்புரி வாவியிற் குறுகித்
தண்ணறுங் கூந்தற் றையலை நோக்கிப்
பண்ணுந் தவமென் பயன்வேண்டி யென்னக்
கொன்றையஞ் சடையனைக் கூடவென் றுரைக்க

நன்றென நகைத்து நான்மறை யாளன்
உடுப்பது கோவண மடுப்பது சுடலை
எடுப்பது மழுமா னேறுவ தெருது
பாம்பு மெலும்பும் பலகலன் மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்

பிச்சைகொண் டுழலும் பிஞ்ஞகன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு நாமுனைக்
கடிமணம் புரியக் கருதிவந் தனம்பசுந்
தொடியணி மடந்தைநிற் கிதுவோ துணிவெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் விலக்க

ஆங்கவ ணாணமுற் றயன்மனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென வணங்கிநின் றேத்திச்
சிந்தர வாணுதற் றெரிவைய ரவர்தாந்
தந்தைதா யிருந்த தடமனை குறுகி

வாவிக் கரையில் வந்தொரு மறையவன்
பாவைதன் செய்கையைப் பாற்றினா னென்றலுந்
தாடொழு தடிகளைத் தருதிரிவ் விடையெனத்
தோடலர் கமலத் தொடைமறை முனிவனை
மாடக யாழ்மொழி மங்கையர் கூடி

நீடிய புகழோய் நீயெழுந் தருள்கென
மைம்மலர்க் குழலி வந்தெமை யழைக்கின்
அம்மனை புகுவனென் றந்தணன் கூறப்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடத்திக் கொணர்கெனச்

சிற்றிடை மடந்தை சீறின ளாகி
மற்றம் மாதர் மதிமுக நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துத லரிதென
மணமிடா தொழியினு மாதவ முனியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையடி தொழுதிட லுலகிய லாமெனத்
தந்தையுந் தாயுந் தாழ்ந்துநின் றுரைப்பச்
சிந்தை கரைந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
நாயகி யதற்கு நன்றென விசைந்தே

ஆயிழை மடந்தை அவனெதிர் சென்று
சேயிதழ்த் தாமரைச் சீறடி பணிந்து
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்த பின்
பொற்பமர் பலகையிற் பொலிவுற விருத்தி
வண்ணப் பரிபுர மலரடி யவற்கங்

கெண்ணெய்க் காப்புடன் இயைந்தன சாத்தி
மஞ்சன மாட்டி மணித்துகில் புனைந்து
விஞ்சிய தவிசின் மேற்பட விருத்தி
ஆடகப் பெருங்கலத் தறுசுவை யடிசில்
சூடகக் கையார் துலங்கப் படைக்க

அந்தண னமுதுசெய் தருளிய பின்னர்ச்
சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழச் சாத்திச்
செவ்வந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு

திவ்விய பிறவுந் திருமுடி சாத்தித்
தக்கோ லத்தொடு சாதிக் காயுங்
கர்ப்பூ ரத்தொடு கலந்தவெள் ளடைகாய்
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்து
வள்ளிநுண் ணிடையார் வணங்கி நின்றபின்

ஆங்கவ ரருத்திகண் டகமிக மகிழ்ந்து
பூங்கொடிக் கினியருள் புரிகுவன் யானெனக்
கற்றைச் சடையுங் கங்கையும் மதியமும்
நெற்றியி னயனமும் நீல கண்டமுங்
கரமிரு நான்குங் கன்றுமான் மழுவும்

உரககங் கணமு மொப்பிடற் கரிய
பவள மேனியிற் பாங்குற வணிந்த
தவளவெண் ணீறுந் தயங்குமுந் நூலுங்
கோவண விடையிற் கொடுஞ்சின வேங்கையின்
பூவண மான புலித்தோ லுடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை யடியா ரெழுபிறப் பறுக்குந்
தாளிடைச் சிலம்புஞ் சதுர்மறைச் சிலம்பும்
மாலயன் றேடியுங் காணா வடிவும்
பாலினன் மொழிக்குப் பரிந்து காட்டலுந்
தாமக் குழலி தனைப்பயந் தவர்கள்

ஏமுற் றார்களி னெழுமடி மகிழ்ந்து
பாவையைப் பெற்றுப் பயன்பெற் றோமெனக்
காவண மிட்டுக் காலுறப் புனைந்து
பஞ்சினும் பட்டினும் பழுதற விதானித்து
மஞ்சுசூழ் கூட மதில்வாயி லெங்கணுந்

தோரண நாட்டித் துகிற்கொடி யெடுத்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துக்
கரும்புங் கமுகுங் கதலியும் நிரைத்துக்
குரும்பையந் தனத்தியைக் கோலஞ் செய்து
சங்கர னெங்கள் தார்குழல் தனக்கு

மங்கல நாணிடு மணநா ளின்றெனத்
தங்குவான் முரசு சாற்றென வள்ளுவன்
மங்கல முரசு மறுகுதோற் றுதலும்
மாலயன் முதலிய வானவ ரெல்லாம்
ஆலமர் கடவுள் அணிமணங் காண்பான்

விரும்பிவந் தீண்டி விமலனை யெதிர்ந்தே
அரும்பவிழ் தாமரை அடிவணங் கியபின்
வலம்புரி முதலா மன்னுவாத் தியங்கள்
புலம்பு கடலென வடங்கா தார்ப்பக்
கொங்கலர் தாமரைக் கொடியிடை தனக்கங்

கங்கு ரார்ப்பன வருந்தொழின் முடித்தபின்
வார்சடை யானையும் மடமயி றனையும்
ஓர்தனி யாதனத் துவந்துட னிருத்தி
விதிமுறை சடங்கு விரிஞ்சன் பேணப்
புதியமங் கலநாண் பூட்டி யருமறை

ஆகம நூல்வழி யாகுதி வேட்டபின்
கோகன கக்கொடி கொழுநன் முதலோர்
குரவார் கூந்தற் கொடியிடை தன்னுடன்
அரவார் கண்டனுக் கறுகுபா லேந்த
அரிவையு மிறைவனும் ஆகுதி வலம்வந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரிய மணவறை யுட்புகுந் தருளி
அரம்பையர் வாழ்த்த அமளியிற் றுயில்கொண்
டுரம்பயில் கதிரோ னுதயஞ் செய்தபின்
விண்ணோர்க் கெல்லாம் விடைகொடுத் தருளிப்
பண்ணேர் மொழிமடப் பாவையை நோக்கி

ஓதநீர் வேலிசூழ் உஞ்சையம் பதிபுகப்
போதுக வென்று போகிய அந்நாள்
இளமதி யணிசடை யெந்தைதன் னருளால்
வளமுடன் வழியின் மலைச்சா ரலிலோர்
களிறும் பிடியுங் கலந்தது காணா

ஒளிர்மதிச் சடையோன் உமைமுகம் நோக்கி
ஓர்வழி யன்றிமற் றோர்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி யாயென
வாரார் முலையாள் மற்றுமுண் டோவென
மெல்லிய லுமையவள் விரும்பினள் பார்த்தே

அல்லிசேர் குழலா ளரன்முகம் பாரா
இவ்வகை யாக வேண்டு மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகளி றாகவும்
மதர்விழி யுமைபிடி வடிவமாகவுங்

கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெடுநிலை போற்றத்
தங்குவெண் ணீறுந் தருமமுந் தழைப்பத்
திங்கள் மும்மழை யெங்கணும் பெருக
முண்டக மலர்போன் முழுதுஞ் சிவந்த

தண்டையுஞ் சதங்கையு மலம்பு தாளிணையுங்
குண்டவண் டியுந்தண்டரள மா லையு
மண்டொளி தழைத்த புண்டர நுதலு
முடிவுகண் டறியா முப்பரி நூலுஞ்
சுடர்விடுங் கனகத் தோளொரு நான்குஞ்

சோதிவண் டரளத் தொடைபுனை கழுத்தும்
பூதலம் புரக்கும் பொற்கரி முகமும்
தவளக் கிம்புரி தருமருப் பிரண்டும்
பவளத் தொளிவாய்ப் பைந்துவ ரிதழும்
இமையா முக்கணும் இருதழை செவியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையா நிலவுமிழ் அவிர்சடை முடியும்
அந்தி வண்ணமும் அங்குச பாசமும்
உந்திச் சுழிமேல் உதரபந் தனமுடன்
ஐங்கரக் கரிமுகன் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்தோன் புதல்வனை நோக்கி

வானோர் மண்ணோர் வந்து வழிபட
ஆனோர் வல்வினை யாசற வகற்றித்
தண்டுள வோனயன் சதமகன் முதலோர்க்கு
இன்றுமுதல் இறையாய் இருத்தியென் றருளித்
தெய்வநா யகியாந் திருந்திழை உமையுடன்

மைவளர் சோலை மாநக ரம்புகுந்து
அமையாக் கூட்டத் தனேக ஙகாலம்
இமையா முக்கண் இறையிருந் தருளினன்
அந்நாள் தன்னில் அசுரர்வந் தடைந்து
பொன்னா டரசுசெய் புரந்தன் முதல

இமையவர் தங்கட் கிடரே செய்ய
இமையவர் தலைவனு மிலேகரு மாலும்
மதுமல ரயனோடு வந்தெம் பிரான்றன்
பதிதனி லணுகிப் பரிந்துநின் றேத்தித்
தம்பி ரானைத் தாளினை வணங்கி

எம்பி ரானே யெங்குறை முடியெனச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கடல்பரு கயில்வேல் கைத்தலத் தேந்தும்
புதல்வனைப் பயந்து தருகுவம் யாமென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்

சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தாடலும்
நேடிய வானோர் நேர்ந்துடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுடன் அழைத்துக்
காவளர் சாரற் கயிலையிற் சென்று

சூரன் வன்மையுஞ் சுரர்படு மிடுக்கணும்
ஊரர வணிந்தோற் குணர்த்திடு நீயெனக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சலும்
எமநாட் டரசன் இயல்புடன் நவில்வான்
அஞ்சா தேநீ யவன்முன் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சார் கண்டன் நயன மூன்றினுள்
நெற்றியி னயன நீயா மாதலிற்
குற்றம்வந் தடாதுநீ கூறுதி சென்றென
வானவன் மொழிய மற்றவன் றானும்
ஈனமின் றாமென விருதய மொருப்பட்டு

எமையா ளிறைவன் உமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகத்
தெள்ளுதேன் மொழியாள் திகைத்து நாணுறப்
பாவகன் வரவு பரமனு மறிந்துதன்

மூவிரு நுதல்விழி முளரியி னுதித்த
அறுமுகப் பொருளை யவன்கையி லளித்தலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதிநீண் முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் வலக்கையிற் கொடுப்பப்

போர்புனை வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
தார்புனற் கங்கைதன் கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்க வொண்ணாமற்
பொரும்புனற்சரவணப் பொய்கையி லிடுதலுஞ்
சரவணக் கமலந் தனினிலை யுற்றுக்

குரவணி மூவிரு குருமணி மகுடமுந்
தோளிரண் டாறுந் துலங்கு குண்டலமுந்
தாளிரண் டுடனே தாமரை வதனமும்
மலையுந் தானவர் வாழ்வினைத் தொலைத்திடுஞ்
சிலையும் வேலுஞ் செஞ்சர முங்கொண்டு

அறுமுகக் கடவுள்வந் தவதரித் திடுதலுங்
கறைமிடற் றிறையொடு கௌரிசென் றெடுத்துத்
தம்பதி யடைந்த சதமகன் முதலிய
உம்பர்சீர் அருளென உயர்விடை வழங்க
வாரந் திகழுஞ் சீர்புனை வெற்புஞ்

சூரன் மார்புந் துளைபடத் துளைத்தே
அமரர் கோவுக் கமருல களித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்கிட
அமரா வதியில் அமர்ந்தினி திருந்தபின்
சமர வேலுடைத் தாரகன் றன்னைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுள மயங்கிக் கடவுளர் மகளிர்
விண்டனர் போன்று மெலிவது கண்டே
அண்டெரல் லாம்வந் தடைவுடன் கூடி
மாதொரு பாகன் மலரடி வணங்கித்
தாதணி கொன்றைச் சடைமுடிக் குன்றே

பிறவா தவனே பேரருட் கடலே
இறவா தவனே யிமையவர்க் கரசே
மருவளர் கடம்பன் மாநகர் புகாமல்
அருளல் வேண்டும் அமலவென் றிறைஞ்சி
இமையோர் சொல்ல இறைவனும் வெகுண்டு

குன்றெறி சுடர்வேற் குமரனை முனியக்
காவல்கொண் டோர்வினைக் கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்திட அவள்தனை வானவன் நோக்கி

மங்கை நீதான் வருந்துத லொழிகெனச்
சக்கர பாணியைச் சான்றா விருத்தி
அக்கணி மார்பனும் ஆயிழை யுமையும்
மிக்கநற் சூது விருப்புட னாட
மன்றலர் கூந்தல் வென்றுமன மகிழ்ந்து

கன்றினால் விளவெறி கண்ணனை நோக்கிச்
சூதினில் வென்றா ராரென மொழிய
ஆதிவென் றாயிழை தோற்றா யென்று
தாதிமி ரளகத் தையலை நோக்கி
நீதி யில்லா நெறியவ னுரைக்க

மலைமகள் வெகுண்டு மற்றவன் றன்னை
நிலமிசைக் குருட்டுப் பாம்பாய் நீபோய்
வாரண முகத்து மதலைமுன் னிருந்த
வேரணி யாலிற் கீழ்க்கிடந் திடுகென
நாரணன் றானு நாகமாய்க் கிடந்தபின்

சீரணி கரிமுகத் திருமுகக் கடவுள்
கரும்புங் கிழங்குங் கதலியும் பெருக்கையும்
விரும்புமாங் கனியும் வேண்டுவ வளித்து
வழிபடு மடியார் வல்வினை தீர்த்தே
எழிறிக ழாலின் கீழினி திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பமா முகக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப்போமென
உம்ப ருலகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி குறுகிக்
கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்திப்

பொரியவ லடைகாய் பொற்புற வைத்துக்
கார்த்திகைக் கார்த்திகை கழித்த பின்னாள்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கித்
திருவைத் தோய்ந்த திகழ்மணிப் புயத்தில்
இருபத் தோரிழை இன்புறக் கட்டி

வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதி நாயகற் காகிய வெழுத்தொடு
மூன்றெழுத் தாலே மொழிந்த மந்திரந்
தேன்றிகழ் குழலியர் சிந்தையு ளடக்கிப்
பொருவரு மலரடிப் பூசனை புரிந்தே

இருபது நாளு மிக்கதை கேட்டு
மற்றைநா டன்னின் மதிமுக மலர்விழிக்
கற்றை வார்குழற் கன்னிய ரெல்லாம்
வாரண முகத்தவன் வாழ்பெருங் கோயில்
சீருடன் விளங்கத் திருவிளக் கிட்டுக்

கோமயங் கொண்டு குறைவற மெழுகி
ஏமுறு கரும்பும் எழிலுடைக் கதலியுந்
தாளுடைக் கமுகுந் தழைபடு மஞ்சளுஞ்
சேறுடைச் செந்நெல்லுந் திசைதொறு நிரைத்தே
கோசிகங் கோடிகங் கொடிவிதா னித்து

நீடிய நூல்வளை நிறைகுடந் திருத்தி
ஐங்கரன் றிருவுரு அமைத்துள் அன்பொடு
தெங்கிள நீருஞ் சீர்பழுக் காயும்
விரிந்த பாளையும் மேதகு நீர்பூச்
சொரிந்த கேதகை தொல்கனி யுடனே

பொருந்திய கவரி புனைமணி மாலை
தெரிந்தவை யெல்லாந் திருந்தத் தூக்கி
மலைமகள் மதலையை மஞ்சன மாட்டிப்
பலநிறப் பட்டும் பழுதறப் புனைந்து
சிந்துர நுதலிற் செறிந்தபொற் பட்டமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திர தனுவென இலங்குமணி யாரமும்
மகரப் பகுவாய் வாகு வலயமும்
நிகரற வொளிவிடு நித்தில மாலை
திகழ்மணி முடியொடு சிலம்புசெஞ் சதங்கை
புகரறு பூண்கள் பொலிவுறப் பூட்டிச்

சந்தனங் குங்குமஞ் சாந்தொடு பனிநீர்
இந்தன நுதலார் இயல்புடன் கொணர்ந்து
செந்துவர் மேனியிற் றிகழ்தரச் சாத்திச்
செருந்தி செண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்குகுன் றாத்தி

தாதகி பாதிரி தாதுமந் தாரம்
மாதவி கடம்பு மகிழ்சிறு ஞாழல்
நெய்த றயில நீலந் தாடிமங்
கொய்திடு குல்லை கொன்றை பைங்குரவு
நரந்தை யலரி நந்தியா வர்த்தங்

கரந்தை கமலங் கமழிரு வேலி
செவ்வந்தி பிச்சி சிறுசண் பகமலர்
மவ்வல் செவ்வல்லி மயிலை யிருவாட்சி
தும்பை யறுகு துழாயிரும் பூளை
வம்பலர் பட்டிகை மத்தமோ டெருக்குக்

காந்தள் கூதாளங் காக்கண மடம்பு
மாந்தளி ருடனே வளர்பஞ்ச வில்வம்
பூந்தொடை களபம் புழுகுகத் தூரி
ஏந்திள முலையா ரிசையச் சாத்திக்
கதிர்நெற் பொரியுங் கண்டசர்க் கரையும்

முதிர்நெற் கட்டியும் முரித்ததிண் கரும்புந்
தேங்காய் செவ்விள நீர்பல கிழங்கு
மாங்கனி வருக்கை வாழைப் பழமும்
எட்பொரி யிருவி யிருதினை மாவும்
அப்பமும் அவலும் ஆலங் காயும்

வெள்ளிலை யடைக்காய் விரவுகர்ப் பூரமோடு
ஒள்ளிய பலவு முவந்துடன் வைத்துப்
பல்லிய மார்க்கப் பழுதறு திருவிளக்கு
எல்லியும் பகலென இருளற விளங்கக்
கற்பகக் கடவுள் களிப்புறச் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்க புகழை விருப்புட னாங்கவர்
கேட்பது கண்டு கேளா திருந்த
பாப்புரு வாகிய பழமறை யாளன்
யாப்புறு கொங்கையீர் யானுநோற் பேனெனக்
காப்பிடு வித்துக் கனிவகை பலவும்

ஆங்கவன் றனக்கு வேண்டுவ கொடுத்துப்
பாங்குடன் இக்கதை பரிவுடன் கேட்டபின்
தெய்வ மங்கையர் சிந்தித் தவைபெற
வையநா யகியால் வாளர வானவன்
பண்டையின் வண்ணம் பார்மிசை யெய்தி

அண்டர் நாயகன் அரிவையோ டிருந்த
உஞ்சைமா நகர்புகுந் துமையடி வணங்க
வெஞ்சின மிகுத்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபநீக் கினன்மறை யோனென
மானன கண்ணி மனைக்கத வடைக்க

இறையவ னிதற்குக் காரண மேதென
மறையவ னுரைப்பான் மற்றுமுன் மதலை
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தையுண் மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றா ணீங்க

யாங்கதை கேட்போ மெனநினைந் தருளிச்
சக்கர பாணி தான்கதை சொல்ல
அக்கணி மார்ப னன்புடன் கேட்ப
மாதுமை யடைத்த வன்றா ணீங்க
மாதுமை தன்னை யரனகை செய்ய

நானே வரநீ நகைபுரிந் ததுவென்று
தேனார் சடையாய் தெளியச் செப்பெனப்
பொன்மலை முலையாய் புகலக் கோளாய்
உன்மகன் நோன்பின் உறுதியை யறிந்து
சிந்தையுண் மகிழ்ந்து சிரித்தேன் யானென

அந்தமில் லானை ஆயிழை வணங்கித்
தேங்கமழ் கடம்பன் தேவர்சே னாபதி
ஈங்கு வரும்படி யானுநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை கேட்டபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண சம்பவன் றான்வந் தெய்தி
அரவணி அமலன் அடியிறைஞ் சியபின்
பரிவுடன் இக்கதை பார்தலந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிர மார்க்கன்
தன்பெரு மனையுந் தானுமிக் கதையை

அன்புடன் கேட்டே அரசு பெற்றபின்
மற்றவ னகரின் மடந்தையர் தம்முள்
எற்பிறை நுதலாள் இலக்கண சுந்தரி
கழைபொரு தோட்கையிற் கட்டிய விழையை
விழைவில ளாகி விதிவழி களைந்து

வற்றிய கொவ்வையின் மாடே போடக்
கற்றையஞ் சடைமுடிக் கரிமுக னருளால்
ஆங்கது தளிரும் அடைவுடன் பூவும்
நீங்கறப் பொலிந்து நிற்பது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை யிருந்த

பூப்பயி லுங்குழற் பொற்றொடி யொருத்தி
கொவ்வை யடகது கொய்வாள் குறுகிச்
செவ்விய வரசன் றேவிமுன் போட்ட
இழையதிற் கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழையோ டிகல்விழிக் கோதைமுன் காட்ட

கரிமுகக் கடவுளைக் கைதொழு தேத்தி
இருவினை தீர இந்நோன்பு நோலென
அப்பமோ டடைகாய் அந்நாட் கொண்டு
புட்பமுன் வைத்து உவந்து நோற்றபின்
பண்டையி னிரட்டி பதமவட் கருளக்

கொண்டுபோ யரசன் கோயில்வைத் தனனே
விக்கிர மார்க்கன் விழிதுயி லளவில்
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சதங்கையுந் தாளினின் றொலிப்பக்
கொண்டல் போல்வரும் குஞ்சரக் கடவுள்

கலைக்குல வரசன் கனவில் எய்தி
அலக்க ணெய்து மரசர்க ளரியே
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடப் புறத்தெனத்
துண்ணென விழித்துத் துணைவியை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ண லுரைத்திடு மளவை தன்னில்
ஆனை குதிரை யவைபல மடிந்து
மாநகர் கேடுறும் வகையது கண்டே
அணியிழை யாளை அயன்மனை யகற்ற
வணிகன் றன்மனை புகுந்தவ ளிருப்ப

மணியும் முத்தும் வன்கல் லாய்விட
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்
மயிலியன் மேனி மடந்தையுண் மறுகிக்
குயவன் றன்மனை புகுந்தவ ளிருப்பக்
குயக்கல முடைந்து கொள்ளை போக

அயற்கடை யவனும் அகற்றிய பின்னர்க்
குயிற்பெடை நிகர்மொழிக் கோதையுமேங்கித்
தூசுக ளார்க்குந் தொழிலோன் மனைபுகத்
தூசுக ளெல்லாந் துணிந்துவே றாய்விட
ஆசறை யவனும் அகற்றிய பின்னர்க்

காசறை யளகக் காரிகை புலம்பி
மாலைக் காரன் மனையிடை புகுந்தபின்
மாலை பாம்பாம் வகையது கண்டே
அயன்மனை யவனும் அகற்றிய பின்னர்ப்
புயலின் வார்ந்த பூங்குழல் வாடி

உழவன் றன்மனை புகுந்தவ ணிருப்ப
வளர்பயி ரழிந்துபல் வளமுங் குன்றவும்
புரிகுழ றனைப்புறம் போவென் றகற்ற
அவ்வை தன்மனை புகுந்தவ ளிருப்ப
அவ்வை சென்ற அகங்க டோறும்

வைதனர் எறிந்தனர் மடியத் தள்ளினர்
கைகொடு குத்தினர் கள்ளியென் றியம்பினர்
அவ்வகை சால அறிவு தளர்ந்து
வவ்விய துயரொடு மனையிடை புகுந்த
கன்னியால் வந்த காரண மிஃதென

மின்னின் நுண்ணிடை மெல்லிநல் லாளே
சாணாக மெடுத்து வாவெனப் புகலச்
சாணா கத்தைத் தையல்சென் றெடுக்கச்
சாணாகம் புழுவாய்த் தண்ணீர் வற்றிப்
பேணிய வெல்லாம் பெரும்புழு வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானார் விழியாள் வருந்தக் கண்டு
தானே சென்று சாணாக மெடுத்துக்
கோல மாகக் கொழுந்தரை மெழுகிப்
பாலின் மென்மொழிப் பாவையை நோக்கிப்
புத்தக மெடுத்து வாவெனப் புகலப்

புத்தகம் பாம்பாய்ப் புரிந்துநின் றாடக்
கொவ்வை யிதழ்வாய்க் கொடிவிழுந் தேங்க
அவ்வைதா னவளை யஞ்சலென் றழைத்துப்
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
முத்தமி ழறிந்த மூதறி வாட்டி

தவநெறி பிழைத்த தையலே நீதான்
சிவன்மகன் நோன்பு தெளிவுறப் புரிகெனப்
பொரியவ லடைகாய் முதற்பல பொருள்களுந்
தெரிவுறப் படைத்துச் சீர்வழி பாட்டுடன்
செவ்விய கரத்திற் றிருந்திழை யாத்தே

அவ்வைமூ வேழ்தினம் அருங்கதை சொல்ல
மவ்வலங் குழலாள் மனமகிழ் கூர்தரச்
செவ்வியோ டக்கதை தெளிவுறக் கேட்டபின்
பொற்புறு விநாயகர் பொலிதிரு வருளால்
விக்கிர மார்க்கன் வேட்டையிற் சென்று

தண்ணீர் வேட்டுத் தன்கிளை விடுப்ப
உண்ணீர்க் கரக முவப்பமொண் டுடனே
பண்ணேர் மொழியாள் பரிந்துடன் கொடுப்பச்
சேனையுந் தானுந் தேக்கிட வுண்டே
யானை குதிரை யவைகளு மருந்திப்

பின்னுந் தொலையாப் பெருமையைக் கண்டு
கன்னிகை யிடத்திற் கடிதி னடைந்துநீ
யாரென வினாவ விளமயிற் சாயலாள்
பேருரை யாதுநாண் பெருகநின் றிடலும்
மின்னே ரிடையன நடைமெல் லியலைத்

தன்மனை யாளெனத் தரணிப னறிந்தே
ஒண்டே ரேற்றி யுளமகிழ் வதனுடன்
கொண்டூர் புகுந்த கொற்ற வேந்தன்
தலைநம் பிராட்டித் தலைமைபெற் றுயர
நிலையருள் புரிந்த நிமலா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பவர் தலைவ போற்றி கருதுவோர் கண்ணே போற்றி
நற்பத மவர்க்கு நல்கு நாயகக் களிறே போற்றி
பொற்கர மைந்தாய் போற்றி புகர்முகக் குன்றே போற்றி
அற்பமாய் மகத்தாய் நின்ற ஆகுவா கனனே போற்றி
அன்று நீ டவனித் தேரை அச்சறுத் தமரர் போற்ற

நன்றருள் புரிந்த வேத நாயகக் களிறே போற்றி
பண்டுதான் மேரு வெற்பிற் பாரத மெழுதி வைத்த
வண்டமிழ் முதல்வா விண்ணோர் வணங்குமா முகவா போற்றி
ஈண்டுமாங் கனியை வேண்டி இறைவனை வலஞ்செய் தங்கன்
நீண்டகை முதல்வா என்று நினைப்பவர் தலைவா போற்றி

ஏத்துவார் முதல்வா போற்றி இறையவன் புதல்வா போற்றி
சீர்த்தநல் லுமையா ளீன்ற செல்வனாஞ் சிறுவ போற்றி
அன்பொடு பரவிநாளும் அடிதொழு வார்கட் கெல்லாம்
துன்பம் வராமல் இன்பே தோன்றநின் றருள்வாய் போற்றி
கண்ணே போற்றி கருத்தே போற்றி

எண்ணுறுந் தாரக வெழுத்தே போற்றி
ஆறணி சடையோன் அருளே போற்றி
நீறணி மேனி நிருமல போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் றருநற் பாலா போற்றி

செய்யதாள் போற்றி போற்றி திரிபுரஞ் செற்றோன் பெற்ற
ஐய, என் வினைகள் தீர்த்தே அஞ்சலென் றருளுவாயே,

## நூற்பயன்

கல்லாத வர்நோற்பிற் கற்பவைநன் றாகவுறும்
இல்லாதவர்நோற்கின் இன்மைபோம் – பொல்லாத
பாவம்போம் மிக்க பழவினைநோய் தானும்போம்
வேகமலம் போமே மிக

வெள்ளை யெருதேறும் விரிசடையோ னீன்றளித்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
கற்றவரும் நோற்றவருங் காதலுடன் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்து நீண்மௌலிக்
கற்பகத்தின் நோன்பைக் கருத்துடனே – சொற்றப்படி
நோற்றோர் மிகவாழ்வர் நோலா திருந்துகதை
கேட்போர்க்கும் வாராது கேடு

அகத்திய முனிவர் அருளிச் செய்த பிள்ளையார் கதை முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்பாடி(ப்)
போதொடு நீர் சுமந்தேத்தி(ப்) புகுவாரவர் பின் புகுவேன்
யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடுங்களிறுவருவன கண்டேன்
கண்டேனவர் திருப்பாதம்கண்டறியாதன கண்டேன்.

## திருவாசகம்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் றிருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனை செந்தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

## திருவிசைப்பா

தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன் புருவம் ஆனார்.

*திருச்சிற்றம்பலம்*

**"அன்பும்சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

**– திருமூலர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன் அரை ஞாணும், பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்(து) அழ(கு) எறிப்பப்
பேழை வயிறும், பெரும் பாரக் கோடும்,
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும், நால் இரும் புயமும்,
மூன்று கண்ணும், மும் மதச் சுவடும்,
இரண்டு செவியும், இலங்கு பொன் முடியும்,
திரண்ட முப்புரி நூல் திகழ் ஒளி மார்பும்,
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப் பழம் நுகரும், மூஷிக வாகன!
இப்பொழு(து) என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே,
திருந்திய முதல் ஐந்(து) எழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளம் தனில் புகுந்து,
குரு வடிவாகிக் குவலயம் தன்னில்
திரு அடி வைத்துத் திறம் இது பொருள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடா வகைதான் மகிழ்ந்(து) எனக்கருளிக்,
கோ(டு) ஆயுதத்தால் கொடு வினை களைந்தே,
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி,
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனி(து) எனக்கருளிக்,
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து,
இரு வினை தன்னை அறுத்(து) இருள் கடிந்து,
தலம் ஒரு நான்கும் தந்(து) எனக்கருளி,
மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே,
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்,
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆ(று) ஆதாரத்(து) அங்குச நிலையும்,
பேறா நிறுத்திப் பேச்(சு) உரை அறுத்தே,
இடை பிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்(று) எழு பாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்(டு) எழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்(து) அறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி,
இடைச் சக்கரத்தின் ஈர் எட்டு நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்,
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண் முகமாக இனி(து) எனக்கருளிப்,
புரி அட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப்படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனி(து) எனக்கருளி,
என்னை அறிவித்(து) எனக்கருள் செய்து,
முன்னை வினையின் முதலைக் களைந்தே,
வாக்கும் மனமும் இல்லா மனோ லயம்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்(து)
இருள் வெளி இரண்டிற்(கு) ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்(து) அழுத்தி, என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்(து)
அல்லல் களைந்தே, அருள் வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி,
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்(பு) உள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்,
கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்(சு) அக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட,
வித்தக விநாயக! விரை கழல் சரணே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணபதி துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக் கொண்டு

துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## கணேச ஷோடசநாம ஸ்தோத்ராணி

ஸுமுகஸ்ச ஏகதந்தஸ்ச
கபிலோ கஜகர்ணக:
லம்போதரஸ்ச விகட:
விக்ந ராஜோ வினாயக:
தூமகேதுர் கணாத்யகேஷா
பால சந்த்ரோ கஜானன:
வக்ர துண்ட சூர்ப்பகர்ண:
ஹேரம்பஸ்கந்த பூர்வஜ:
அஷ்டா வஷ்டௌச நாமாநி ய: படேத்
ச்ருணு யாதபி வித்யாரம்பே விவாஹேச
ப்ரவேச நிர்க்கமே ததா
ஸங்க்ராமே ஸர்வ கார்யேஷு
விக்நஸ்தஸ்ய நஜாயதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ கணபதி ஸ்தோத்திரம்

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூபலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேச்வர பாத பங்கஜம்

மூஷிக வாஹன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித ஸுத்ர
வாமன ரூப மஹேச்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே


ப்ரணம்ய சிராஸம் தேவ
கெளரி புத்ரம் விநாயகம்
பக்தா வாஸம் ஸ்மரேன் நித்யம்
ஆயு: காமார்த்த ஸித்தயே
ப்ரதமம் வக்ரதுண்டஞ்ச ஏகதந்தம் த்விதீயகம்
த்ரிதீயம் க்ருஷ்ண பிங்காக்ஷம் கஜவக்த்ரம் சதுர்த்தகம்
லம்போதரம் பஞ்சமம்ச **ஷஷ்டம்** விகடமேவச
ஸப்தமம் விக்நராஜம்ச தூம்ரவர்ணம் ததாஷ்டகம்
நவமம் பாலசந்த்ரம்ச தசமம்து விநாயகம்
ஏகாதசம் கணபதிம் துவாதசம்து கஜானனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவாதசை தானிநாமாநி த்ரிஸந்த்யம்ய: படேந்நர:
நசவிக்ன பயம் தஸ்ய ஸர்வ ஸித்திகரம் ப்ரபோ:
வித்யார்த்தி லபதே வித்யான் தனார்த்தி லபதே தனம்
புத்ரார்த்தி லபதே புத்ரான் மோக்ஷார்த்தி லபதே கதிம்

ஜபேத் கணபதி ஸ்தோத்ரம் ஷட்பிர் மாஸை: பலம் லபேத்
ஸம்வத்ஸரேண ஸித்திம்ச லபதே நாத்ர ஸம்சய:
அஷ்டப்யோ ப்ராம்மணேப்யஸ்ச லிகித்வா ய: ஸமர்ப்பயேத்
தஸ்ய வித்யா பவேத் ஸர்வ கணேசஸ்ய ப்ரஸாதத:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணேசாஷ்டகம்

ஏகதந்தம் மஹாகாயம் தப்த காஞ்சன ஸந்நிபம்
லம்போதரம் விசாலாக்ஷம் வந்தே அஹம்
கணநாயகம். 1

மௌஞ்சி கிருஷ்ணாஜினதரம் நாக யஞ்ஞோப வீதினம்
பாலேந்து விலஸன் மௌலிம் வந்தே அஹம்
கணநாயகம். 2

அம்பிகா ஹ்ருதயானந்தம் மாத்ருபி: பரிபாலிதம்
பக்த ப்ரியம் மதோன்மத்தம் வந்தே அஹம்
கணநாயகம். 3

சித்ர ரத்ன விசித்ராங்கம் சித்ராமாலா விபூஷிதம்
சித்ர ரூபதரம் தேவம் வந்தே அஹம்
கணநாயகம். 4

கஜவக்த்ரம் ஸுர ச்ரேஷ்டம் கர்ண சாமர பூஷிதம்
பாசாங்குச தரம் தேவம் வந்தே அஹம்
கணநாயகம். 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஷிகோத்தம ஆருஹ்ய தேவாஸுர மஹாஹவே
யோத்துகாமம் மஹாவீர்யம் வந்தே அஹம்
கணநாயகம். 6

யக்ஷ கின்னர கந்தர்வ ஸித்த வித்யாதரை: ஸதா
ஸ்தூயமானம் மஹாத்மானம் வந்தே அஹம்
கணநாயகம். 7

ஸர்வவிக்ந ஹரம் தேவம் ஸர்வவிக்ந விவர்ஜிதம்
ஸர்வஸத்திப் ப்ரதாதாரம் வந்தே அஹம்
கணநாயகம். 8

கணாஷ்டகம் இதம் புண்யம் பக்திதோ ய:படேந்நர:
விமுக்த ஸர்வ பாபேப்யோ ருத்ரலோகம் ஸ கச்சதி



**விக்ந விநாயகர்**

கணபதிக்கு "விநாயகர்" என்று ஒரு பெயரும் உண்டு என்பது எல்லோருக்கும் தெரியும். திருநெல்வேலி ஜில்லாவில் பெரும்பாலும் இந்தப் பெயராலேயே தான் "பிள்ளையார்" என்று நாம் அழைக்கும் கணபதி கொண்டாடப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21 விதமான பலன்கள் பெற

விநாயகப் பெருமானான கணபதியை வழிபடுபவர்களின் மனத்தகத்தே அப்பெருமானே சகல ஜகத் காரணமாயும் அனைத்தையும் தம்முள் அடக்கிய பிரணவ மூர்த்தியாகவும் விளங்குகிறார்.

விநாயகப் பெருமானின் தோற்றம் பற்றி பல புராண வரலாறுகள் உள்ளன.

உமாதேவியின் உத்தியான வனத்திலிருந்த சித்திர மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. சக்தியும் சிவமும் ஏககாலத்தில் பிரணவத்தை நோக்கவே அயோநிஜனாக கணபதிப் பெருமான் அவதரித்தார்.

அன்னை உமாதேவிக்கும், பண்டாசுரனுக்கும் கடும்போர் நடந்துகொண்டிருந்தது. ஆணவமே வடிவான அரக்கனுடன் சத்தியப் பேரொளியான தேவி உலகைக் காக்க உக்கிரமாகப் போரிட்டாள். அன்னையை வெல்ல எண்ணிய பண்டாசுரன் விக்கினயந்திரம் ஒன்றை நிறுவினான். அதை அறிந்த காமேஸ்வரி புன்னகைத்தவளாக காமேஸ்வரனை நோக்கினாள். இருவரின் கடாட்ஷமும் கலந்ததன் பலனாக தோன்றிய விக்னேஸ்வரர் அரக்கனின் விக்கின யந்திரத்தை பயனற்றதாகச் செய்தார். அசுரனை வென்றாள் தேவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்துவ வடிவம்

கணபதியின் உருவம் தியானிப்போரை பரவசத்தில் ஆழ்த்தும் அற்புத வடிவானது. விநாயகரின் திருமேனி தத்துவம் பொருந்தியது. இப்பெருமானின் திருவுருவம் யானை முகமும், மூன்று கண்களும், இரு செவிகளும், ஐந்து கரங்களும், பெரிய வயிறும், குறுகிய இரு திருவடிகளும் கொண்டது. யானை முகம் விநாயகர் பிரணவ ஸ்வரூபி என்பதை விளக்குகிறது. ஐங்கரங்களும் பஞ்சகிருத்தியத்தைச் (ஐந்தொழிலை) செய்யும் ஆற்றல் உடையவை என்பதை உணர்த்துகிறது. சோம சூரிய அக்கினியை முக்கண்கள் உணர்த்துகின்றன. விசாலமான இரு செவிகளும் ஆன்மாக்களை மலவாதனை ஆட்கொள்ளாமல் காத்து வினை வெப்பத்தை போக்கியருளக் கூடியவை. உண்மைக்கோர் விளக்கமாக விநாயகரின் பெருவயிறு அண்டங்கள் அனைத்தையும் உயிர்களையும் தன்னகத்தே அடக்கியிருக்கிறது. இங்ஙனம் தத்துவ வடிவம் கொண்டவரே கணபதி.


காணாபத்ய நெறிவழி செல்வோர் – கணபதியை உபாசிக்கும் அடியவர்கள் - உண்மையிலேயே பெரும் பாக்யசாலிகள். கணநாதனை வழிபடும் போதே இவர்கள் சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன் ஆகிய தெய்வங்களின் பேரருளையும் அடைய முடிகிறது. அது எவ்வாறு என்று பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அவ்யாக்ருத ப்ரும்மணோ கணேசஸ்ய சரீரே, நாபிர்-பிரும்மா, முகம் விஷ்ணு; நேத்ரம் ருத்ர: வாமபார்ச்வம் சக்தி: தக்ஷிணம் சூர்ய: ஆத்மா ஸ்மிதா மய:*

என்ற கணபதி ஸ்துதியே இதற்கு விளக்கம் கூறுகின்றது. கணபதியின் நாபி பிரும்ம ஸ்வரூபம்: முகம் விஷ்ணு அம்சம், நேத்ரம் சிவ மயம்; இடது பாகம் சக்தி வடிவம், வலப் பாகம் சூரிய ஸ்வரூபம் என்று இந்த ஸ்துதி கூறிகிறது. நாம் போற்றும் பிரதான தெய்வங்களும் கூட கணபதியினுள் அடக்கம் என்பதை இந்த ஸ்துதி விளக்குகிறது. இந்த உண்மையை மேலும் விளக்கும் வண்ணம் புராண வரலாறுகள் பல வழங்குகின்றன. அவை பல தெய்வங்களும் கணபதியைப் போற்றியதை எடுத்துக் கூறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணேச தத்துவம்

*"ஸ்வஸ்வாநந்த மகாதேவ:*
*கணேசா ப்ரம்மணஸ்பதி:*
*ஆநந்தஸ்யாதிதே வோயம்*
*ஸ்வாநந்தேச இதிர்யதே"*

மேற்குறிப்பிட்ட ஸ்துதி, கணபதி தத்துவத்தை சிறப்பாக விளக்குகிறது. கணபதிக்கு ப்ரம்மணஸ்பதி என்றும் ஓர் திவ்ய நாமம் உண்டு. இவர் ஸ்வாநந்தம், ஆனந்தம் எனும் இரு இன்ப நிலைகளுக்கும் அதிதேவதையாவார். ஆதலால் இவருக்கு ஸ்வாநந்தேசர் என்று பெயர். ஸத், சித் ஆனந்தம் இவை மூன்றும் பரப்ரும்மத்தின் ஸ்வரூப இலக்கணமாகும். ஒரு தத்துவத்திற்கு வெவ்வேறான மூன்று லட்சணங்கள் தேவையில்லை. பின் ஏன் இந்த மூன்று லட்சணங்கள்?

அது அழியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக ஸத் என்று ஒரு அடைமொழி சேர்க்கப்பட்டு அதைக் "காலத்தின் அளவுகடந்த ஆனந்தமாக" ஆக்கப்படுகிறது. இவ்வானந்தம் சாசுவதம் என்றாலும் அறிவிற்குப் பொருந்தாவிடில் சுவையற்றதாகிவிடக் கூடும். அதற்காக இந்நிலையில் சித் என்ற அடைமொழி ஏற்படுகிறது. சுய அனுபவத்திற்கு எப்போதும் பொருந்தக்கூடிய விசயமான ஆனந்தம் இது. இந்த ஆனந்தமே ஆத்மாவின் சொரூபம். ஆத்மாவே ப்ரம்மம். ஆகவே எல்லா ஜீவராசிகளுக்கும் ஈஸ்வரர்களுக்கும் ஒரே ஆன்மஸ்வரூபமாக விளங்குவது கணேச பரப்ரம்மமே என்பதுதான் மேற்கூறிய வடமொழி சுலோகத்தின் விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆனந்தமயம்*

*அன்னஸ்யாதி பதிர்விஷ்ணு: பிராணஸ்யாதி பதிர் சிவ:*
*மனஸ்து பராசக்தி ! சூர்யோ விஞ்ஞானந்தேவதா:*
*ஆனந்தமயா தேவஸ்து ஸ்வாநந்தேச கஜாநந:*

என்னும மேற் குறிப்பிட்டுள்ள சுலோகம் திருமால் அன்னமய கோசத்திற்கு அதிபதி என்றும், பரமேசுவரன் பிராணமய கோசத்திற்கு அதிபதி என்றும் பராசக்தி மனோமய கோசத்திற்கு நாயகி என்றும், சூரிய பகவான் விங்ஞானமய கோசத்திற்கு தலைவன் என்றும், கணபதி ஆனந்தமய கோசத்திற்கு அதிபதி என்றும் கூறுகிறது. கணபதி ஆனந்தத்தின் இருப்பிடம் என்பதை இது தெளிவாக்குகிறது. பேரானந்தத்தை – அருளானந்தத்தை விழைகிறவர்கள் கணபதியை வழிபட வேண்டும் என்பதை இதன்மூலம் அறிந்து கொள்ளலாம். விநாயகரின் வாசஸ்தலமே "ஆனந்த பவனம்" எனப்படும்.

*விநாயக ரகசியம்*

*நரகாராமாய ! கஜாகார: புருஷ:*
*பிருகிருதி புருஷா பேதை:*
*கரகிருதி தரோ கஜாநந:*

ஜீவ-பிரம்ம ஐககியத்தை உணர்த்தும் வடிவம் தான் கணபதியின் வடிவம். கழுத்துவரை மனித ரூபமும் அதற்கு மேலே யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமும் கொண்டிருக்கும் கணபதி, மனித வடிவத்தில் ஜீவாத்மாவையும், கஜ ரூபத்தில் பிரம்ம ஸ்வரூபத்தையும் இரண்டும் இணைந்த ஒரு அற்புத நிலையில் காட்சியளிக்கிறார். ஆக கணபதியின் திவ்ய வடிவம் ஜீவ-பிரும்ம ஐக்கியத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டுகிறது.

பரமன் சிருஷ்டி செய்த இந்தப் பூவுலகில் தர்மம் நலிந்து அதர்மம் மலியும் போது பரமனே அவதரித்து சத்திய பரிபாலனம் செய்தாலன்றி விமோசனம் ஏற்படுவதில்லை. இதை, புராண, இதிகாசங்கள் உரைக்கின்றன. சத்திய பரிபாலனத்திற்காக இவ்வாறு பரமன் அவதாரம் எடுப்பதை முழுமையான அவதாரம், பகுதியான அவதாரம், அம்சாவதாரம் என்றெல்லாம் கூறுவர். கணேச அவதாரங்களைப்பற்றி பார்க்கவ புராணம், முத்கல புராணம், பிராம்ம புராணம், பிரும்மாண்ட ஆங்கீரஸ புராணம் ஆகிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

உலகத்தில் எல்லா விக்கினங்கள் தோன்றக் காரணமாயிருப்பவரும், அந்த விக்கினங்கள் விலக அருள் புரிபவரும் விநாயகர்தான். ஆகையினாலே தான் இப்பெருமான் விக்கின விநாயகர், விக்னேஸ்வரர், விக்னராஜர் என்றெல்லாம் போற்றப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ

## *கணபதியின் சிறப்பு*

கல்யாண குணங்கள் நிரம்பியவர் கணபதி. மட்டமாக நினைப்பதற்கு "த்ருணம்" போல் என்கிறோம். அதாவது புல் என்கிறோம். "புல்லானாலும் புருஷன்" என்ற பழமொழி கூட புல் அவ்வளவு எளிய பொருள் என்பதைத் தெரிவிக்கிறது. அதைத் தனக்கு ப்ரீதியான வஸ்துவாக கொண்டார் மஹா கணபதி. அந்த அகரம் புல் ஒரு சிறந்த மூலிகை "அ" எழுத்து எப்படி முதலில் தோன்றியதோ அப்படியே பூமியில் முதல் தோற்றமே 'அகரம் புல்" தான். ஆகரம் என்றால் பேட்டை, ஊர் என்றும் பெயர். முதல் தோற்றமாகியதால் "அகரம் புல்" என்று வழங்கி வந்தது. நாளடைவில் அறுகம் புல் ஆகிற்று. இதை மூதண்டம் என்றும் கூறுவர். இது கொடிய உஷ்ணத்தை தணித்து குளிர்ச்சி தரும் சக்தியுள்ளது. கடும் கோடையில் கூட புல்வெளிகளில்பட்டுவரும் காற்று குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா? அனலாசுரனை விழுங்கி மூவுலகும் வாழ வழிசெய்த மஹாயோகியான கணபதிக்கு உஷ்ணம் தணிவித்துக் கொள்ள அறுகு உதவுகிறது. அதன் தத்துவம் உணர்ந்த முதல்வன் தன் தலையிலேயே அதைச்சூடினான். இது எளிதில் கிடைக்கக்கூடியது. இதை அவருக்கு அர்ப்பணம் செய்வதால் தீர்க்க ஆயுள் ரோக நிவர்த்தி ஏற்படுகிறது. "தூர்வை" எனப்படும் இந்த அறுகினால் ஹோமம் செய்வதும் வழக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுபோலவே யாருக்கும் சுலபமாக "எருக்கு" கிடைக்கும். இதுவும் மிகவும் உஷ்ணமான சிறந்த ஆயுர்வேத மூலிகை. இது விஷக்கடிகளைக் கூட கண்டிக்கும் தன்மை வாய்ந்தது. இந்த சுலபமான பொருள் விலையின்றிக் கிடைக்கின்ற பொருளைத், தான் ஏற்று பக்தர்களுக்கு அருளை பிரசாதமாக அள்ளி வழங்குகிறார். கணேசர். மற்றும் யானை முகம் கொண்டதால் தன்னைப் பணிபவர்க்கு தன்னையே தருகிறார் என்பது புலனாகிறது. யானையைப் பார்த்திருக்கிறீர்கலல்லவா அது எல்லோரையும் தன் பாதத்தால் தூக்கி தன் முதுகின் மேல் ஏறிக்கொள்ள உதவுவதைப் பார்த்திருக்கிறோம். அதுபோல் தன்பாதம் சரணடைந்தவரை தன் சிரசின் மேல் வைத்துக்கொண்டாடும் குணம் படைத்தவர் என்பதையும் அவர் ஜீவராசிகளின் பாரத்தை எல்லாம் தானே ஏற்று வகிப்பவர் என்றும் புலப்படுகிறது.

## *தெய்வத்தின் குலதெய்வம்*


கணேச புராணத்தில் ஒரு வரலாறு உள்ளது. கங்கைக்கும், பரமனுக்குமிடையே ஒரு சம்வாதம் ஏற்பகிறது. யோகத்திலிருக்கும் சிவபெருமானிடம் கங்கை "அண்டசராசரங்களிலுள்ள சகல ஜீவராசிகளும் தங்களைக் குறித்து தியானம் செய்யும்போது தாங்கள் சதா எதையோ குறித்துத் தியானம் செய்கிறீர்களே அப்படி யாரைக் குறித்து தியானம் செய்கிறீர்கள் ? அடியாளுக்கு விளக்கி சொல்ல வேண்டும்" என்று வேண்ட அதற்கு சிவபிரான் "பிரம்மா, விஷ்ணு, ருத்ராதி தெய்வங்களையும், மற்றும் முப்பத்து முக்கோடி தேவதைகளையும் சிருஷ்டி செய்து ரக்ஷித்து வரும் என் குல தெய்வமான கணபதியைக் குறித்து தியானம் செய்கின்றேன்" என்று பதிலளித்தார்.

இத்தனை பெருமையோடு விளங்கும் கணபதியை ஆராதிப்பவர்களும் குலதெய்வமாக கொண்டாடுபவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கியசாலிகளாவார். மேற்கூறிய வரலாற்றின் அடிப்படையின் காரணத்தாலோ என்னவோ இன்னும் தஞ்சை மாவட்டத்தில் சில தீவிர சிவபக்த வைதீக குடும்பங்கள் தங்கள் பெயரோடு "சிவன்" நாமத்தையும் சேர்த்துக்கொண்டு கணபதியை குலதெய்வமாக ஆராதிக்கிறார்கள். தமது புதல்வர்களில் மூத்தவனே தெய்வமாகவும், இளையவனை குருவாகவும் ஏற்று அவர்களிடம் தம்மை ஐக்கியமாக்கிக்கொண்டு அத்வைதப் பிரகடனம் செய்யும் பரம்பொருட் தத்துவத்தின் விளக்க இலக்கணமாக பரமன் பக்தி செலுத்தும் பண்பு உள்ளங்களில் நிறைந்து காணப்படுகின்றான். கணபதியின் வழித்தோன்றலாக ஈசனும், ஈசனின் வழித்தோன்றலாக கணபதியும் காட்சி தரும் போது பக்தியில் திளைப்பவர் பரம்பொருளிடமிருந்து தம்மைப் பிரித்துப் பார்க்க முடிவதில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கணபதி வழிபாட்டின் தத்துவங்கள்

எக்கருமத்தை ஆரம்பிக்கும்போதும் மங்களத்துடன் ஆரம்பிக்க வேண்டுமென்பதெ நம் முன்னோர்களின் நன்னெறி. முறைகளை ஓத ஆரம்பிக்கும் போது ஓங்காரத்துடன் ஆரம்பிக்க வேண்டும் என்பது வேதநெறி. ஓங்கார வடிவமாகவும், மங்கள வடிவமாகவும் இருப்பவரே கணேச பெருமான். ஏக்காரியத்தையும் மங்களகரமாக வெற்றிபெறச் செய்யும் சாதனமே கணேச வழிபாடாகும்.

***சிவகணபதி***

கணபதியின் வரலாறு பலவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. வேதததின் வாயிலாக நாம் அறிவோம்.

1. **"கணானாந்துவா கணபதிம் ஹவாமஹே ..........."**

(மூன்று வேதங்களிலும்)

2. **"கணேப்யோ கணபதிப் யச்சவோ நமோ நம: .........**

(ஸ்ரீருத்ரம்)

3. **"வக்ரதுண்டாய வித்மஹே சூர்ப்பகர்ணாய தீமஹி! தன்னோ தந்திப் பிரசோதயாத் !!"**

(யஜுர்வேத ஆருணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற இம்மந்திரங்களின் மூலமேயாம். சிவனுக்கும் கணபதிக்கும் வேற்றுமைப்பாடு கிடையாது என்பதை நாம் யஜுர் வேத சகம்மிதையிலுள்ள ஸ்ரீ ருத்ரத்தில் "கணேப்யோ கணபதிப்யஸ்ஸவோ நமோ நம:" என்ற மந்திரத்தாலும் கணேச பஞ்சரத்தினத்தில் "கலாதராவதம்சகம்" (பிறைச்சந்திரனை அணிந்தவன்) என்னும் சொல்லாலும் நன்கு உணரலாம்.

## *சக்தி கணபதி*

பார்வதி தேவி ஒரு சமயம் தோழிகளுடன் நீரில் விளையாடிக் கொண்டிருந்தாள் அப்பொழுது தோழிகள் பரிகாசமாக தேவியை நோக்கி தாயே சிவபெருமானுக்கு பற்பல கணங்கள் ஏவலாளர்களாக இருக்க தங்களுக்கு ஒருவரும் இல்லையே என்று பரிகசித்தனர். ஆதைக்கேட்டுவிட்டு புன்சிரிப்புடன் தேவி அதே எண்ணத்துடன் சுகந்த திரவியத்தை உடலில் தேய்த்துக்கொள்ள எடுத்துக் கையினால் உருட்டினாள் அப்பொழுது அதுவே கணபதியாக மாறியது. உடனே கணபதி தாயை வணங்கினார். வணங்கிய கணபதியை தேவியானவள் பிரமத கணங்களுக்குத் தலைவனாக்கினாள். குணபதி என்று அவருக்குப் பெயரிட்டு அவரைத் தன் தொண்டனாக்கிக் கொண்டாள். இவ்வரலாறு வேதமும், கணபதி என்று அழைப்பதை ஒட்டியதாகும்.

மஞ்சளையும் சந்தனத்தையும் நாம் விவாகம் முதலிய எல்லாக் காரியங்களிலும் கணபதியாகப் பிடித்து வைத்து வழிபடும் முறைக்கும் இதுவே சான்றாகும். ஆகவே சிவசக்தி வடிவமே கணபதியாகும். "ஆத்மாவை புத்ர நாமாஸி" என்று வேதம் கூறுகின்றது. "தானே மகன், மகனே தான்" என்பது இவ்வேத வசனத்தின் கருத்தாகும்.

"நாம் ஏன் தலையில் குட்டிக் கொள்கிறோம்? "
"தோர்பீ: கர்ணம் செய்கிறோம் ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்றால் தலையில் குட்டிக் கொள்வதையும், கைகளால் காதைப் பிடித்து உட்கார்ந்து எழுந்திருப்பதையும் செய்கிறோம். தேவர்கள் கஜமுகாசுரன் முன்னிலையில் இவைகளைச் செய்து வந்தனர். கணபதி கஜமுகாசுரனை சம்ஹறித்தார். அப்பொழுது கணபதியைத் துதிசெய்யும் தேவர்கள் "இப்படிப்பட்ட தீங்குகள் இனிமேலாவது துஷ்டர்கள் மூலம் வராதிருக்க வேண்டும்." உங்கள் முன்னிலையிலேயே நாங்கள் செய்கின்றோம். இதை தங்கள் முன்னிலையில் செய்பவர்களுக்கு துன்பங்கள் ஒன்றும் நிகழாவண்ணம் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அதனால் தான் நாம் யாவரும் இன்றுவரை அதை செய்துவருகின்றோம்.

***தேங்காய் உடைத்தல்***

நமக்கும் செல்வம் வேண்டுமென்றும், நல்ல மழை வேண்டுமென்றுமே ஈசனுக்குத் தேங்காய் உடைக்கின்றோம். குடுமி இல்லாததும், நீர் இல்லாததுமான தேங்காய்களை உடைக்கவே கூடாது. உடைத்தால் மழையின்மை, செல்வ அழிவு இவைகள் ஏற்படும் என்பதில் ஐயம் இல்லை. இளநீர் சிந்தினால் மழை பெய்யும் என்றும், நறுமணம் உள்ள தேங்காயானால் ராஜ்ய லக்ஷ்மி வளம் பெறுவார்களென்றும் குடுமியுள்ள தேங்காயை உடைத்தால் செல்வம் பொங்கும் என்றும் காரணாகமத்தில் எதிர்மறையாக கூறப்பட்டிருக்கின்றது. ஏவ்விதமெனில்

**"ஜலஹீனே வர்ஷஹீனம், கேசஹீனே தனக்ஷயம் !**
**துர்கந்தம் சலிலம் தஸ்ய ராஜ்யஸ்ரீ: அன்யதா பவேத் !!**

*(பூர்வ காரணாகமம் பக்.* 335)

**"அறுகம் புல்லால் கணபதியை**
**நாம் ஏன் அர்ச்சிக்கின்றோம் ?"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல் விற்று ஜீவிக்கும் ஒரு பெண்மணி ஒரு நாள் பெரு மழையினால் ஒரு பிள்ளையார் கோவில் வாசலில் புல்லுக்கட்டை வைத்துவிட்டு இருந்தாள். அப்போது ஒரு மாடு புல்லுக்கட்டிலிருந்து இழுத்துத் தின்றது. அதிலிருந்து ஒரு அறுகம் புல் காற்றினால் தள்ளப்பட்டு விநாயகரின் பாதத்தை அடைந்தது. ஆலயத்திலுள்ளவர் அம்மாட்டை விரட்டவே அம்மாடு கோவிலைப் பன்முறை சுற்றிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. இதைக்கண்டு கருணையுற்ற விநாயகப் பெருமான் அம்மாட்டிற்கும் புல் சுமந்து வந்த பெண்மணிக்கும் காட்சியளித்தார். இதைக்கண்ணுற்றவர்கள் "இவர்கள் என்ன புண்ணியம் செய்தனர்" என்று கணபதியை வினவினர். ஆதற்கு விநாயகர் இன்று பெய்த மழையினால் உபவாசம் இருந்து அறுகம்புலினால் என்னை அர்ச்சித்த புண்ணியத்தைச் செய்தனர் என்று கூறினார்.

ஓர் சமயம் ஜனகராஜனின் கர்வத்தை அடக்க எண்ணி விநாயகன் ஒரு குஷ்டரோகியாக ஜனகராஜனை அடைந்தார். ஜனகராஜன் "என்ன வேண்டும்" என்று வினவ, "போதிய உணவளிக்க வேண்டும்" என்று கூறினார். ஜனகன் எவ்வளவு உணவளித்தும் அவரது பசி தீரவில்லை. அவ்வூரிலுள்ள எல்லா வீட்டிலுள்ள உணவையும் அருந்தச் சொன்னார். அவ்விதம் அருந்தியும் பசி அடங்கவில்லை. "விரோசனா திரிசிரஸ்" என்னும் ஒரு ஏழைத் தம்பதிகளின் வீட்டை அடைந்தார். அவ்விருவரும் கணபதி பக்தர்கள். அவர்கள் தங்களிடம் "ஒரு அறுகம்புல் தான் இருக்கிறது" என்று அதை பக்தியுடன் அளித்தனர். அப்புல்லில் இருந்து அறுசுவை உணவு உண்டாகவே அதை உண்டு பகவான் திருப்தியடைந்தார்.

மற்றோர் சமயம் அனலாசுரன் என்னும் ஓர் அசுரனை உலக நன்மைக்காக விநாயகர் விழுங்கினார். அவர் உடலில் எல்லா உலகங்களும் அடக்கமானபடியால் உலகங்கள் பொசுங்க ஆரம்பித்தன. இதைக்கண்ட முனிவர்கள் 21 அறுகம் புற்களால் விநாயகரை அர்ச்சித்து அவரைச் சாந்தப்படுத்தினார். அப்பொழுது விநாயகர் "பல யாகங்களால் எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவதை விட, அறுகம் புல்லால் எம்மை அர்ச்சித்தால் எனது அருளைப் பெறலாம்" என்று கூறி அருளினார். ஆம் மகிமையை உணர்ந்து ஜனங்கள் அறுகம் புல்லைக் கொண்டு விநாயகரை அர்ச்சிக்கின்றனர்.

**ஆவணி சுக்கில சதுர்த்தியில் புற்று மண்ணினால் விநாயகர் செய்து அர்ச்சித்தல்**

ஒரு முறை நள மகாராஜன் அவையை கௌதம முனிவர் அடைந்தார். மன்னன் முனிவரை வரவேற்று "தங்களுக்கு என்ன வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருள்க" என்று கேட்டார். முனிவர், "உன் செல்வங்களைக் கண்டு மகிழவே யாம் இங்கு வந்தோம் என்று கூறினார்." இச்செல்வம் எனக்கு எங்ஙனம் கிடைத்தது என்று நளமகாராஜன் வினவினான்?. முனிவர் அவனை நோக்கி" ஓ மன்னனே ! நீ முற்பிறவியில் பிப்பில நாட்டில் ஒரு ஏழைச் க்ஷத்திரியனாகப் பிறந்தாய். சுற்றத்தவர்களினால் ஏழையான நீ விரட்டப்பட்டு கானகத்தை அடைந்தாய். அங்கு கௌசிக முனிவர் உன்னிடம் கருணை கொண்டு கணேச மந்திரத்தை உனக்கு உபதேசித்தார். "சிராவண சுக்கில சதுர்த்தியில் புற்று மண்ணினால் பிள்ளையார் செய்து அவரை வழிபடு, எப்பொழுதும் விநாயகரையே நினைத்து அதுமுதல் பூஜித்து வா" என்று கூறினார். "அதைச் செய்ததினால் அப்பிறவியிலும், இப்பிறவியிலும் சகல சௌபாக்யங்களையும் பெற்றாய்" என்று கூறினார். இதைக்கேட்ட நளனும் முன்னிலும் பன்மடங்கு பக்தியுடன் கணபதியைப் பூஜிக்கலானான். மக்களும் மன்னனின் அடிச்சுவடைப் பின்பற்றி இன்றுவரை விநாயகப் பெருமானை ஆவணி சுக்கில சதுர்த்தியில் அறுகம் புற்களால் பூஜித்து சர்வ சித்திகளையும் பெற்று வருகின்றனர்.

(இக்கட்டுரை காலஞ்சென்ற நல்லூர் நியாய சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ கி.சுப்பிரமணியசாஸ்திரிகள் அவர்களால் 1962 ல் எழுதப்பட்டது)

*ஸ்ரீ வல்லப கணபதிக்கு ஜெய் !*

*சுபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 விதமான பத்ரங்களைக் கொண்டு பிள்ளையார் சதுர்த்தியன்று பூஜை செய்ய வேண்டும்.

**பத்ரங்கள்**

1. முல்லை இலை 2. கரிசலாங்கண்ணி இலை 3.வில்வம் 4.வெள்ளறுகம்புல் வேறோடு கூடியது 5.இலந்தை இலை 6.ஊமத்தை இலை 7.துளசி 8.வன்னி இலை 9.நாயுருவி இலை 10.கண்டங்கத்திரி இலை 11.அரளி இலை 12.எருக்கிலை 13.மாவிலை 14.விஷ்ணுக் கிராந்த இலை 15.மாதுளை இலை 16.தேவதாரு இலை 17.மருவு 18.அரச இலை 19.ஜாதி மல்லிகை இலை 20.தாழை இலை 21.அகத்திக்கீரை இலை.

**பலன்கள்**

1.தர்மம் 2.பொருள் 3.இன்பம் 4.ஸௌபாக்யம் 5.கல்வி 6.பெருந்தன்மை 7.நல்வாழ்வுடன் கூடிய மோக்ஷம் 8.தேஜஸ் 9.வீரலக்ஷ்மி கடாக்ஷம் 10.விஜய லக்ஷ்மி கடாக்ஷம் 11.எல்லோரையும் கவர்ந்திருக்கும் தன்மை 12.குடும்பத்தில் ரக்ஷை 13.மக்கட்பேறு 14.நுண்ணறிவு 15.நற்புகழ் 16.சோகத்தினால் வாடாத தன்மை 17.தீயவைகளை அகற்றல் 18.தன் வாக்கிற்கு எதிர் வாக்கு அடங்கிப் போதல் 19.கோபம் கொண்டவர்களை சாந்தப்படுத்தும் ஞானத்தன்மை 20.ஏவல், ஆபிசாரம் அடங்குதல் 21.துயர் தீர்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனைமுகனும் அறுகம்புல் வழிபாடும்

**கலாநிதி சபா ஜெயராசா**
[யாழ் பல்கலைக் கழகம்]

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழுங் காலங்களில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம்புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்து உரைக்கப் பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப் புராணம் யாவருக்கும் பயன்பட வேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து. அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினார்.

முதலாவது உபாசனா காண்டத்தில் அறுகம் புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பலவகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபட வேண்டும் என்பதை விளக்க, அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்படுகிறது. சுபலனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்தணனுடைய பெயர் மதுசூதன். அம்மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப்படுகின்றது. மேலும், அனலாசுரனை அழித்த ஆனைமுகக் கடவுளின் வெப்பம் தண்ணெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப் பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட்கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. ஒரு புல்லுக்கு நிகராகுமா குபேரனுடைய செல்வம்; என்று கூறுமளவுக்கு அறுகின் நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. "ஆனைமுகக் கடவுளினுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது." என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக் கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட்பொதிந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்புகளும் ஆ–வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமா– ஆற்றலா– ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.

**நன்றி : ஐங்கரன் அமிர்தம் சிறப்புமலர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா வாழ்வியல் நினைவுகள்

உலக வாழ்வியலில் ''ஆன்மா'' என்பது ஓர் அற்புதவரப்பிரசாதம். அந்த ஆன்மாவை தாங்கி நிற்கும் கூடுதான் எமது மனிதஉடல். ''பதவீ பூர்வ புண்ணியானாம்'' என்கின்ற ஜோதிட வாக்கியத்திற்கு அமைய பிறப்பும் இறப்பும் எமது பூர்வ ஜென்ம பலன்களுக்கு ஏற்ப அமைந்து விடுகின்றது. இதிலே பிறந்த பிறப்பை அர்த்த புஷ்டியாக்கி தமது வாழ்வியலின் பதிவுகளை மற்றவர்கள் மறக்க முடியாத அளவிற்கு நிலைநிறுத்தி செல்பவர்கள். ஒரு சிலரே அதிலே முதன்மையானவர் அமரர் பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா (J.P.U.M) அவர்கள் யாழ் ஈழத்தின் தலைநகர் நல்லூரில் முப்போதும் திருமேனி தீண்டும். அர்ச்சக பாரம்பரியத்திலே. சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள் சாரதாம்பாள் தம்பதிகட்கு 06.11.1915 ஐப்பசி 21ம் நாள் சனிவாரம் சித்திரை நட்சத்திரத்தில் சிரேஸ்ட புதல்வனாக பிறந்தார். இவர்பின் உடன் பிறந்தோராய். சுந்தர் ராஜகுருக்கள் (அமரர்) சாமிரட்ண சர்மா (அமரர்) சண்முகராஜக்குருக்கள் சோமசுந்தர ஐயர், சாம்பசிவஐயர், மீனாம்பிகை அம்மா, ராஜலட்சுமி, கமலாம்பிகை அம்மா ஆகிய எண்மர் சகோதரர்களாக பிறந்தனர். அஷ்ட ஐஸ்வர்யமாய் எட்டு சகோதரர் சேர்ந்த இவர்களின் சிறு வயது வாழ்க்கை இனிமையாக அமைந்தாலும், தந்தையாரின் மறைவு மூத்த மகனான இவரின் பொறுப்பு குடும்பத்திற்கு தேவையானது. 1934ம் ஆண்டு தலைநகர் கொழும்புக்கு வருகை தந்து உதவி அர்சகராக கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திலே பணியாற்றி அதன் பின்னர் மீண்டும் நல்லூருக்குச் சென்று சிறிது காலம். அங்கு ஆலயப்பணிகள் மேற்கொண்டு இருந்துவிட்டு 1936ம் ஆண்டு தனது 21ம் வயதில் ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலயத்திற்கு வருகை தந்து அர்ச்சகராக பொறுப்பேற்றுக் கொண்டார். ''தீவுக்கோயில்'' என்று அழைக்கப்படும். மருதானை ஸ்ரீபால செல்வவிநாயகர் ஆலயம் அப்பகுதி என்பன காடாகவே காட்சி கொடுத்த காலம் அது. அன்பு அடக்கம், ஆளுமை, என்கின்ற முப்பரிமாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் ஆலயத்தின் வளர்ச்சியில் முழுமையான அக்கறை கொண்டார்.

ஸ்ரீ பாலசெல்வ விநாயகரும் இவரைத்தன் துதிக்கரத்தினால் அணைத்துக்கொண்டார். இந்த இணைப்பு ஸ்ரீ பாலசெல்வ விநாயக பெருமானின் ஆலய வளர்ச்சிக்கு அற்புத வரப்பிரசாதமானது. தனது 27வது வயதில் 1942ம் ஆண்டு இல்லறம் என்கின்ற நல் அறத்திலே இணைந்தார். அஷ்டலக்ஷ்மிகளின் ஐஸ்வர்யம் பொழிய ஸ்ரீமதி ராஜலட்சுமி இவரின் வாழ்க்கைத் துணையானார். இவர்களின் இனிய இல்லறத்து பயனாய் எட்டு ஆண்மகவும் மூன்று பெண்மகவுமாய் 11 பிள்ளைச் செல்வம் பொழிந்தது.

பாலச்சந்திரசர்மா, ஸ்ரீதரசர்மா, ராஜாராம்சர்மா, ஜெயராம்சர்மா, ராதாகிருஷ்ணசர்மா ரகுராம்சர்மா, சிவராம்சர்மா (அமரர்) ராகவன் சர்மா (அமரர்) மைதிலி, சாருமதி, யுகந்தி (நளினி) என அமைந்த பிள்ளைச் செல்வங்களோடு தலைநகர் கொழும்பில் சைவசமய வழிபாடுகளின் கைராசியான குருக்கள் எனும் பெயர் பெற்று பாலசெல்வ விநாயகரின் பிரதம குருவாகி இளமை, இனிமை, இங்கிதம் பெற்று அந்தணகுல ஆசாரம் வழுவாத குருவாய் மிளிர்ந்து விளங்கினார். தனது 11 பிள்ளைச் செல்வங்களுக்கும் முறையே சம்பூர்ண லட்சுமி, சிவமணி, சுகிர்தலட்சுமி, ஜெகதாம்பாள், மங்களாம்பிகை, கல்யாணி, சியாமளா, மல்லிகா, மகாலிங்க ஐயர், ஸ்ரீ காந்த சர்மா, சுவாமிநாத சர்மா ஆகியோர்க்கு திருமணம் செய்வித்து இல்லறத்திலே பொழிவுற வைத்தார். தன்னுடைய ஆன்மீகப் பணிகளில் நிறைவான சேவை செய்தார். முக்கியமாக இன, மத, மொழி, பேதமின்றி அனைவரும் இவரிடம் வந்து ஆசி பெற்றுச் செல்லும் வகையில் அன்புடன் திகழ்ந்த பெரியார் இவரின் குடும்பமும் ஆலமரமாய் விரிந்து பெருகியது. சந்திரமௌளி, பாலாஜி, சிவகௌரி, கோபிநாத், காயத்திரி, கார்த்தீபன் பிரசன்னா, பிரசாந்தன், பிரகாஷ், சங்கீதா, ஸ்ரீராம், ரம்யா, விக்னேஷ் ஸ்ரீநிதி, ஷண்முகேஷ், அர்ச்சனா, ஹேமலதா, ரமேஷ், வரலக்ஷ்மி, சதீஸ், சுதர்ஷன், சௌமியா, ஸ்ரீவித்தியா, என்கின்ற பேரக் குழந்தைகள் சாரதா, ஸ்ரீராம், விஜயராம், ராகுல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகேஷ், ராகவ், ஆர்யா, திரிதேவ், ரமேஷ் எனும் பூட்டப் பிள்ளைகளும் இவரின் வம்ச விருத்தி செல்வங்களாய் மிளிர்ந்து நிறைவான குடும்பம் என்கின்ற நிலையிலே வாழ்ந்தார். ஸ்ரீ பால செல்வ விநாயகப் பெருமான் ஆலயத்திலே 1951ம் ஆண்டு 1963ம் ஆண்டு 1974ம் ஆண்டு முறையே நடந்த மஹாகும்பாபிஷேகங்களையும் 1977ம் ஆண்டு நூதன மூர்த்திகள் மஹாலட்சுமி ஷண்முகர் கும்பாபிஷேகமும் 1988ம் ஆண்டு ராஜ கோபுர திருப்பணி நிறைவோடு நடந்த மஹா கும்பாபிஷேகம் என ஆலயத்தில் ஐந்து கும்பாபிஷேகங்கள் இவரின் தலைமையில் கீழ் நடை பெற்றது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதுமட்டுமின்றி தலைநகர் கொழும்பில் நடைபெறும். எந்த அரசியல் விழாவாக இருந்தாலும், இந்துமதம் சார்பாக இவரின் ஆசியே முன்னிலைப்படுத்தப்படும். இலங்கை அரசாங்கத்தினால் 1977ம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதவானாக தெரிவு செய்யப்பட்ட முதல் சமயக் குருக்கள் என்கின்ற பெருமை இவரையே சாரும். 1974ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற முதல் சண்டிஹோமம் 1986ம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற முதல் அஸ்வமேதயாகம் 1992ம் ஆண்டு ப்ரத்தியங்கரா ஹோமம் போன்ற மாபெரும் யாகங்கள் நடைபெறுவதற்கு இந்தியாவில் இருந்து வேத விற்பன்ன சிவாசாரியார்களை அழைத்து முன்னின்று நடத்திய பெருமை பங்கு என்பன பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா அவர்களையே சாரும். இந்து கலாச்சார அமைச்சர் செல்லையா ராசதுரை முதல் இன்று வரை கலாச்சார திணைக்களப் பணிகளில் ஐயாவின் ஆலோசனையே முதன்மையானது. தவில் மேதை தட்சணாமூர்த்தி, நாதஸ்வர மேதை காரைகுறிச்சி அருணாசலம் முதல் இன்றய முதன்மை வித்துவான்கள் வரை கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்தில் இசைக்கச்சேரி செய்யாத கலைஞர்களே கிடையாது எனலாம். தனியே ஆலயத்தோடு மட்டும் தனது பணியை தொடராமல் சமூகத்திலும் தன் பங்களிப்பை செவ்வனே செய்தார். அகில இலங்கை சிவப்பிராமணசங்கம் ஸ்ரீராமகானசபா, கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை கப்பித்தாவத்தை தொண்டர் வித்தியாலயம் கொழும்பு தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளில் தலைவராக போசகராக கௌரவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசகராக எனப் பல பதவிகளை வகித்து நின்றார். தனது ராசியான திருக்கரத்தினால் 4000 திருமணங்களுக்கு மேல் நடாத்தி வைத்திருக்கின்றார். சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரையும் அன்பாக நேசித்து பழகும் பண்பாளர். "சிவாகம பூஷணம்" சிவாசாரிய சிரேஸ்டர்," "வேதாகமமாமணி" "தேசமான்ய" போன்ற கௌரவ விருதுகள் இவரை தேடி வந்தன. தென்னிலங்கை அனைத்து அரசியல் பிரமுகர்களும் இவரிடம் மிகுந்த கௌரவமும், மரியாதையும் கொண்டு செயற்பட்டவர்கள் 2002ம் ஆண்டு இவரின் அன்பு மனைவி ராஜலட்சுமியின் மரணம் இவருக்கு மனதளவில் பெரும் சோர்வு நிலையை கொடுத்தது. இருப்பினும் தனது ஆன்மீக பணிகளை இன் முகத்தோடு மேற் கொண்டார். தொடர்ந்து இவருடைய மகன்மார்கள் சிவராம்சர்மா (சிவா), ராகவன் சர்மா ஆகியோரின் திடீர் மரணங்கள் ஐயாவை இன்னும் வேதனையின் உச்சம் என்னும் நிலைக்கு இட்டுச் சென்றது. இந்தக் கவலைகளினால் அடிக்கடி சுகயீன நிலை கொண்டாலும். முடியாமல் படுக்கை நிலையில் பெரியவர் இருந்ததே இல்லை. இவரின் மனதில் கடைசிகாலங்களில் இருந்த ஒரே ஒரு ஆசை. புதிதாக அமைக்கப்படும் கருங்கற் திருக்கோயிலில் ஸ்ரீ பாலசெல்வ விநாயக பெருமானை பிரதிஸ்டை செய்து கும்பாபிஷேக காட்சி காண வேண்டும் என்பதே. ஆனால் விநாயகரோ அதற்குள் நீ என்னோடு கலந்து கொள். என அழைத்துச் சென்று விட்டார். மரணம் நிகழ்ந்த நாளில் கூட விநாயகருக்கு பூசனை புரிந்து நன்றாக நடந்து திரிந்து பேசி மாலை நேரம் தேனீர் கொண்டு வரும்படி கேட்டு விட்டு படுக்கையில் படுத்தவர். நந்தன வருடம் வைகாசி மாதம், பரணி நட்சத்திரம் சதுர்த்தசி திதி சேர்ந்த அவர் பிறந்த சனி வாரத்தில் தனது 97வது அகவையில் பால செல்வ விநாயகரின் பாத கமலத்தைப் பற்றிக் கொண்டார்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கு அழைத்தீர் என் குருவே.......

16.05.2012லன்று வீரகேசரியில் எனது குருப்பெயர்ச்சிப் பலன் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அன்று இரவு தொலைபேசி மணி அழைக்கின்றது. ரீசீவரை எடுத்தால் **"தேவா" என்ன ஆளையே காணோம் இந்தப் பக்கம். குருப்பெயர்ச்சிப் பலன் எனக்கு எப்படி? பேப்பரிலைபார்த்தேன். எனக்கு சரியில்லை என்று எழுதி இருக்கிறீர்கள் சரி அது இருக்கட்டும். நீங்க ஒருக்கா வாங்கோ நான் உங்களோடு கதைக்க வேணும்.** இதுவே என்குரு, தந்தை, ஆசான் என நான் மதிக்கும் என் தெய்வம் என்னோடு இறுதியாக பேசிய வார்த்தை. அவர் அழைத்தால் வழமையாக உடனே சென்றுவிடுகின்ற நான். வேலைப் பளுகாரணமாக இரண்டு நாள் கழித்து 19.05.2012 அன்று பிற்பகல் 5.00 மணிக்கு குடும்பத்தோடு புறப்பட்டு செல்ல ஆயத்தம் செய்கின்றேன். தொலைபேசி அழைப்பு வருகின்றது. மறுமுனையில் அழுகை குரலில் ஜெகதா அண்ணி மாமா எங்களை எல்லாம் விட்டு போய்விட்டார் என்று கூறிய செய்தி இடியாய் இதயத்தில் விழுகின்றது. நடமாடும் விநாயகர் என்று நாம் போற்றியவர் அந்த விநாயகரோடே இரண்டறக் கலந்து விட்டார். 1989ம் ஆண்டு கொழும்பு மாநகருக்கு எனது உறவினர் சந்திரசேகர குரு வீட்டிற்கு வந்து இங்கு ஏதேனும் கோயிலில் பணிபுரிய இருக்கின்றேன். எனக் கூறிய போது. என்னை அழைத்துக் கொண்டு போய் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயத்திலே. பெரியவரிடம் ஒப்படைத்து இது. **என் உறவுப் பையன் தான். கொழும்புக்கு புதுசு நீங்கதான் இங்குள்ள பூஜை நடைமுறைகளை சொல்லிக் கொடுத்து செய்விக்க வேண்டும். எனக்கூறிய போது. அவர் இனி என்ர பிள்ளை நீங்க கவலைப்படாதைங்கோ.** எனக்கூறி என்னை தத்தெடுத்துக் கொண்டார். அன்றிலிருந்து இன்றுவரை நான் அவர்வீட்டுப் பிள்ளைதான். அந்த உரிமை எனக்கு இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இலங்கை, இந்தியாவின், தலைசிறந்த சிவாசாரியார்கள், தவில், நாதஸ்வர கலைஞர்கள், என யார் கொழும்பு வந்தாலும் தங்கிச்செல்லும் கற்பகத்தரு இல்லம் இவரின் மனை. யார் வந்தாலும் வரவழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரித்து உணவளிக்கும் அற்புதக்குணம். இவரின் தனித்துவம் கொழும்பு நகரில் உள்ள வியாபார நிலையங்களில் ஹோம பூஜைகள், திருமணங்கள், என்பன எப்படிச் செய்ய வேண்டும். என்கின்ற தொழில் கற்றலுக்கு எமக்கு வழி காட்டியவர். இங்கு பணிபுரிவது எமது சொந்தக் கோயில், சொந்த வீடு என்கின்ற மன நிலை தருகின்ற ஆத்ம திருப்தி கொடுக்கும். தினமும் தனது அன்றாட ஆத்மார்த்த பூஜை செய்வதிலும், மதியம் சமைத்த உணவு தினம் விநாயகருக்கு அர்ப்பணித்து காக்கைக்கு அன்னமிட்டு. அதன் பின்பே தான் உணவு உட்கொள்வார். அது மட்டுமின்றி இந்தப் பால செல்வ விநாயக பெருமானுக்கு பணி புரிந்த அத்தனை பேரும். உச்சநிலையில்தான் இருக்கின்றோம். அதற்கு விநாயகர் அருளும் பெரியவர் ஆசியுமே காரணம். நான் நீண்ட காலம் வெளிநாட்டில் இருந்தும். தொடர்ந்து இருக்கின்ற வசதி இருந்தும் அதை எல்லாம் விட்டு இங்கு வருவதற்கு பெரியவரும் ஒரு காரணம். **தேவா உங்களுக்கு ஏன் வெளிநாடு இங்கு எல்லாப் புகழும் உங்களை தேடிவரும்** என அடிக்கடி கூறுவார். எனது எழுத்தாற்றல், கவி ஆற்றல் என்பனவற்றை கண்டறிந்து 1990களில் ஸ்ரீராமகான சபா மூலம் வெளிவந்த "மாநதம்" இதழில் எழுதுவதற்கு வாய்ப்பு வழங்கினார். எனது ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் மனப்பூர்வமாக வாழ்த்தி பெருமிதம் தரும் வகையில் எனது மகன் முறையானவர்தான் என்று கூறிக் கொள்வார். ஒவ்வொரு புது வருடப் பிறப்பன்றும் நான் கைவிஷேடம் வாங்குவது இவரிடம் தான். நான் புதுமனை வாங்கியவுடன் மிகவும் சந்தோஷப்பட்டார். எனது மனைவி நீங்கள் வீட்டில் கால் பதிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்காக திடீரென ஒரு நாள் வந்து வீட்டில் இருந்து ஒரு சுற்று பார்வை பார்த்து ஆசிகூறிச் சென்றார். இப்படியான இந்த மஹானின் வாழ்வியலில் நான் உரிமையுடன் கலந்து பழகும் பாக்கியம் பெற்றேன். எதற்கு இறுதியாக என்னை அழைத்தார் என்பதற்கு விடைகாண முடியாமல் தவிக்கின்றேன். விநாயகரோடு கலந்து நின்று அவர் எமை ஆசிர்வதிக்கட்டும்.

துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ உலகிற்கு ஓர் பேரிழப்பு

சிரித்தமுகம், சிவப்பொலிவுடன் கூடியமேனி, வேட்டி சால்வையுடன் "வாங்கோ.... எப்படிச்சுகம்" எனக் கேட்கும் முது பெருஞ் சிவாசாரியரான பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்கள் 2012.05.19 ஆந் திகதி மாலை பாலசெல்வவிநாயகப் பெருமானின் தாழ்களை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டு சைவ உலகம் அதிர்ச்சியுற்றது. " என்ன... காலையில் ஐயாவைக் கண்டேன், நண்பகல் அவரை வீட்டில் கண்டேன் வழமை போலத்தான் இருந்தார்" என்று பலரும் கேட்ட வண்ணம் இருந்தனர். அவரோடு எல்லோருக்கும் இருந்த அன்பு, பாசத்தால் வந்த வார்த்தைகள் அவை.

பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்களுடன் ஒரு சகாப்தம் நிறைவு பெற்றது. அவர் ஓர் ஆலவிருட்சம். அதிலே குடும்பம், கோவில், சமூகம், கல்வி, கலை எல்லாமே இருந்தன.

இவரது முன்னோர்கள் கோதாவதியில் இருந்து இலங்கையில் குடியேறியவர்கள் இவரின் பேரன் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்திரிகளும் தந்தை சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் அவர்களும் நல்லூர் கந்தசாமி கோவிலில் பணிபுரிந்தவர்கள் அவ்வேளையில் இராக்ஷச வருஷம் ஐப்பசி மாதம் 20 ஆந் திகதி (1915.11.06) பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா பிறந்தார்.

தமிழ், ஆங்கிலக்கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியிலும் வேத சிவாகமக் கல்வியை சுன்னாகம் பிராசீன பாடசாலையிலும் கற்றார். பிரம்மஸ்ரீ பரமேஸ்வர சாஸ்த்திரிகளிடம் கற்று மேலும் அவர் ஓர் நல்லறிஞரானார்.

1925 இல் தமது பெற்றோருடன் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரத்தில் குடியேறினார். தகப்பனுடன் சிவப் பணிகளை குருகுலக்கல்வி முறையிற் கற்றுக் கொண்டார். 1938 ஆம் ஆண்டு முதல் கொழும்பு ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயப் பணிகளைப் பிரதம குரு என்ற முறையிற் பதவி ஏற்றுத் தமது இறுதிக்காலம் வரை விநாயகர்ப் பணி புரிந்து வந்த குருக்கள் அவர். அவர் 2012.05.19 அன்று மாலை 4.30க்கு இறந்தாலும் அன்று ஆலயத்தில் உச்சிக்காலப் பூஜையில் கூட பங்கு கொண்டிருந்தமை குறிப்பிடக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலசெல்வ விநாயகப்பெருமான் பணியிலே ஈடுபட்ட பிரம்மஸ்ரீ குருக்கள் அவர்கள் ஆலய அறங்காவலர்களோடு இணைந்து ஆலய நிர்மாணப் பணிகளையும் முன்னின்று செவ்வனே ஆற்றினார். 1951 இல் மூலஸ்தானம், அர்த்தமண்டபம் முதலானவை கட்டப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1975 இல் மேலும் திருத்த விரிவாக்கல் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகஞ் செய்யப்பட்டது. அதன் பின்னர் மண்டப வேலைகள் செய்யப்பட்டதுடன் இராஜகோபுரமும் அமைக்கப்பட்டு 1988 இல் மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா அவர்கள் தமது ஆலயத்திலே ஸ்ரீ மஹா லக்ஷ்மியை 1974 இல் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகஞ் செய்து மகிழ்ந்தார். அதன்பின்னர் இலங்கையில் முதலாவதாக இவ்வாலயத்தில் சண்டிஹோமம் சிவஸ்ரீ ரங்கசாமி தீட்சதர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. 1995 ஆண்டு பிள்ளையாருக்கு தேர் அமைத்து வெள்ளோட்டம், தேர் பவனி என்பன இடம்பெற்றன. ஆலயம் மேலும் புனரமைப்பதற்காக பாலஸ்தாபனஞ் செய்யப்பட்டு 2013 இல் மஹா கும்பாபிஷேகத்துக்கு நாள் வைத்த பின்னர் 1939 முதல் 2012 வரை பிள்ளையார் பணியில் இருந்த பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்கள் இறையடி எய்தினார்.

ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய சிறப்புக்கிரியைகளுக்கு சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் அன்பு அழைப்பை ஏற்று காஞ்சீபுரம் சாளுவ சிவஸ்ரீராஜப்பாக் குருக்கள் சென்னை காளிகாம்பாள் ஆலய சிவஸ்ரீ சாம்பமூர்த்திக் குருக்கள், தாம்பரம் சிவஸ்ரீ முத்துக்குமார சுவாமிக் குருக்கள், முதலான குருமார் இவ்வாலயப்பணிகளுக்கு அடிக்கடி வருவதுண்டு. நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் மட்டக்களப்பு வியாகப்ண சிரோமணி சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள், சுன்னாகம் நா. சோமாஸ்கந்த குருக்கள் முதலானோர் இவ்வாலய சிறப்புப் பணிகளைச் செய்தவர்கள் ஆவர்.

இவ்வாலய விசேஷ கிரியைகளின்போது மேன்மை தங்கிய ஜனாதிபதிகள் J. R. ஜயவர்த்தன பிரேம தாச முதலானோரும் அமைச்சர்களான சௌ. தொண்டமான், செல்லையா இராஜதுரை, பி.பி. தேவராஜ், செல்லசாமி, பீற்ரர்கனமன், காமினி திசநாயக்க முதலானோர் வந்து வழிபட்டமையை இங்கு கூறலாம்.

கல்விப்பணிக்கு என்றும் முன்னின்று உழைத்தவர் சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களோடு இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கைச் சிவப் பிராமண சங்கத்தை 1956இல் ஆரம்பித்தார். அதன்மூலம் கொழும்பு சுன்னாகம், கோப்பாய், துன்னாலை மாவிட்டபுரம் ஆகிய இடங்களில்பிராமணச் சிறார்களுக்காக சமஸ்க்கிருத குருகுலக்கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு பரீட்சையும் நடைபெற்றுவந்தது. கப்பித்தாவத்தையில் ஒரு சிறு பாடசாலை கதிர்காம தொண்டர் அநுசரணையுடன் சிவஸ்ரீ குருக்கள் அவர்களால் 1952 இல் ஆரம்பிக்கப்பட்டது. அது புதிய கட்டிடம் அமைக்கப்பட்டு ஜனாதிபதி பிரேமதாச அவர்களால் 1981 ஆம் ஆண்டு தொண்டர் மஹா வித்தியாலயமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதேபோல அறநெறிக்கல்வி வளர்ச்சிக்காக குருக்கள் அவர்கள் 1986 இல் அறநெறிப் பாடசாலையையும் ஆரம்பித்துக்கல்வி வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமகன் அவர்.

கொழும்பு ஸ்ரீ ராம கான சபையுடன் இவர் அதிக ஈடுபாடு கொண்டு பன்னெடும் காலமாக அதன் தலைவராக விளங்கியவர். ஸ்ரீ ராம கான சபையில் கட்டிட வேலைகளை நிறைவாக்கி அதிலே சீதா சமேத ராமனையும் லட்சுமனரையும் பிரதிஷ்டி செய்து மகிழ்ந்தார்.

1986 இல் இலங்கையில் நடைபெற்ற அஸ்வமேதயாகக் குருமார் யாவரும் ஸ்ரீ பாலசெல்வவிநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்கள் இல்லத்திலேயே தங்கி யாகக் கிரியைகளைச் செய்தனர். அதேபோன்று முதலாவது, இரண்டாவது அகில உலக இந்து மாநாட்டில் சிவஸ்ரீ குருக்கள் அவர்களின் பங்கு அளப்பரியது. கொழும்பு தமிழ்சங்கம், கம்பன் கழகம் முதலானவற்றின் பணிகளுக்கு என்றும் அருள் ஆசி நல்கிவந்தவர் எமது குருக்கள் அவர்கள்.

இசை, கலை என்பன பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்களுக்கு இரு கண்கள் தவில் , நாதஸ்வரக் கலைஞர்கள், கர்நாடக இசைமேதைகள், வாத்திய விற்பன்னர்கள் எல்ரோரதும் அன்புக்கும் பாத்திரமான சிவஸ்ரீ குருக்கள் அவர்கள் தமது ஆலய மஹா கும்பாபிஷேகத்தில் காரைக்குறிச்சி அருணாசலம் அவர்களை அழைத்து நாதகானம் முழக்கியமை பெருமைக்குரிய விஷயம் ஆகும். அதேபோலவே சிற்பாசாரியர்கள், சிற்பக்கலைஞர்கள் எல்லோரும் அவரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள்.

திருமதி கௌரீஸ்வரி ராஜப்பன், திருமதி வாசுகி ஜெ. கதீஸ்வரன் முதலானவர்களின் இசை, நடனக் கலை விழாக்களை விநாயகர் பூஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருடாவருடம் ஆரம்பித்து வைப்பது அவரது இசை ஞானத்தை எடுத்தியம்புகின்றது.

கதிர்காமயாத்திரிகர் தொண்டர் சபை கப்பித்தாவத்தை கோவிலுக் கருகாமையில் இருந்து பல்துறைத் தொண்டுகளை ஆற்றிவருகின்றது. அச்சபையில் ஆரம்பம் முதல் அவர் இறுதிநாள்வரை சபையின் தொண்டுகளுக்கு என்றும் உறுதுணையாக விளங்கிவந்தவர் எமது குருக்கள் அவர்கள்.

இவ்வாறு புகழ்பூத்த குருக்கள் அவர்கள் தமது குடும்ப வாழ்க்கையை 1942 இல் செல்வி இராஜலக்ஷ்மி அம்மாவைத் திருமணஞ் செய்து ஆரம்பித்தார். இத்தம்பதிகள் எல்லோருக்கும் முன்மாதிரியாக இருந்து இல்லற தர்மத்தை செவ்வனே செய்து வந்தனர். திருமணம், சீமந்தம், பிறந்தநாள், சாமத்தியச்சடங்கு, உபநயனம், சிவாசார்யர் அபிஷேகம், புதுமனை புகுவிழா முதலான சகலற்றிற்கும் 97 வயதிலும் அவர் பரிசு கொடுத்து வாழ்த்தியமை சகல மக்கள் பால் அவருக்கு இருந்த அன்பினைக் காட்டுகின்றது. அவரது பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள் யாவரும் அன்புகொண்டு அவரின் அன்பிற்கு என்றும் விருப்பமானவர்கள் ஆவர். அவரது இறுதிக்காலம் வரை அவர்களுடன் பிள்ளையார் பணியினை பிரம்மஸ்ரீ ஜயராம சர்மா அவர்களும் சிவஸ்ரீ ராதா குருக்கள் அவர்களும் செய்து வந்தனர். பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா அவர்கள் குடும்பமே என்றும் தம்மைப் பிள்ளையார் பணிக்கு அர்ப்பணித்து வந்துள்ளது. பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா அவர்கள் எனக்கு மாமா முறையானவர். என்னோடு மிகவும் அன்பு கொண்டு பழகிவந்தார். எனது எழுத்தாக்கங்களுக்கு என்றும் உறுதுணை புரிந்துவந்தவர்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வாழும் சகல மக்களும் பிரம்மஸ்ரீ பா.சண்முகரட்ண சர்மாவிடம் அன்பு கொண்டவர்கள். அவர் ஆற்றிய தேவப்பணி, சமூக, சமய, கல்வி, கலைப்பணிகள் அநந்தம். அவரது ஆன்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போம்.


இந்து வித்யாநிதி பிரம்மஸ்ரீ

**சோ. குஹானந்த சர்மா**

அகில இலங்கைச் சிவப் பிராமண சங்க காரியதரிசி

ஆலாசகர் (இந்து) கல்வி அமைச்சு,

உபதலைவர் – சர்வ மத சம்மேளனம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

இலங்கை திரு நாட்டின் யாழ்ப்பாணம் நல்லூர் எனும் புனித பூமியில் 1915ம் ஆண்டு 11ம் மாதம் 6ம் நாள் பிரம்மஸ்ரீ பால சுப்ரமணிய குருக்கள் சாராதம்பாள் தம்பதியினர் மூத்த குமாரன், கொழும்பு ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சண்முகரட்ணசர்மா (சமாதான நீதவான்) பிறந்தார். இவர் தனது வாழ்க்கை துணைவியாக இராஜலெட்சுமி அம்மாளை திருமணம் செய்து, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் சந்ததிபெற்று நோயற்ற வாழ்வுகுறைவற்ற செல்வம் என்பதற்க்கு உதாரணமானவர். தனது தள்ளாத வயதிலும் விநாயகருடைய பூஜைகள் யாவற்றையும் தானே முன்னின்று சிறப்பாக நடாத்திய பெருமகனார்.

இவர் தனது சேவை காலத்தில் இலங்கை திருநாட்டில் மக்களுக்காக, பலவிதமான துன்பங்கள் வந்த போதும் பாலசெல்வ விநாயகரை அயராது மனம் சலியாது பூஜைகளை நடாத்தியவர். இலங்கை அரசாங்க வைபவங்கள் அனைத்திலும், இந்து மத சார்பில்ஆசி வழங்கி சகல மதத்தினராலும் போற்றப்பட்டவர். ஸ்ரீ பால செல்வவிநாயக ஆலய நித்திய நைமித்திய கருமங்களோடு மாத்திரமல்லாமல் ஆலய திருப்பணி வேலைகளையும் சிறப்பாக நடாத்த வேண்டும் என்ற பெரும் எண்ணம்கொண்டு பக்தர்களில் பெரும் நிதியைக்கொண்டு ஆலய பரிபாலன சபையோருக்கு ஈடு இணையாக நின்று உழைத்தவர். மகாகும்பாபிஷேக பெருவிழாவை தரிசிக்க ஆவலுடன் இருந்தார் அவருடைய கடந்த பிறந்தநாள் வைபவத்தில், நாங்கள் ஆசிபெறச்சென்றபோது, எமது தந்தையாரின் பெருமைகள் பலவற்றை பேசி மகிழ்ந்தார். அவருடைய கனவுகளை அவருடைய குமாரர்கள் சிறப்பாக நடத்த பால செல்வ விநாயகர் திருவருள் பொழியவும். குடும்பத்தினர் அனைவருக்கும் மன அமைதி தந்து சகல சௌபாக்கியங்களுடன் வாழவும், அவர் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்வோமாக

இவ்வண்ணம்
நவாலியூர்
சுவாமி விஸ்வநாத மணி குருக்கள் - குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீன கர்த்தா, பிரதமகுரு, "வேதாகமமாமணி" பிரம்மஸ்ரீ சோ. இரவிச்சந்திரக்குருக்கள் அவர்களின்

# இரங்கல் செய்தி

அந்தணர் குல சிகரம் என போற்றுதற்குரிய அமரர் பா. சண்முகரட்ண சர்மா அவர்கள் நம் வாழ்நாளில் எழுபது ஆண்டுகள் கொழும்பு மாநகரில் கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகரின் பாதாரவிந்தங்களை பணிந்தேத்தி ஆலயத்தின் வளர்ச்சிக்கு முன்நின்று உழைத்த விநாயகப்பெருமான் அடியார்கள் அனைவருடனும், அன்பும், பண்பும், பக்தியும் மிளிர ஆலவிருட்சம் போல் இருந்து நல்வழி காட்டிய ஆலய குரு.

ஆசார சீலராக குருத்துவத்தில் சிறந்தோங்கி சமுதாய பணிகளில் தம்மை அர்ப்பணித்து அந்தணர் குல தலைவராய் சமய பெரியவராக எல்லா விழாக்களிலும் கலந்து சிறப்பித்தார்.

எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு அவர்களது அறிவுரையும் ஆசியும் பெருந்துணை நின்றன என்றால் மிகையாகாது. உலக இந்துக்கள் போற்றும் சிவாச்சாரியாராக இலங்கையின் இன மத பேதமற்ற குருபீடாதிபதியாக இறுதி நாள் வரை ஏரம்பன் பணி செய்து ஏகாந்தமாய் இறையடி சேர்ந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார் அனைவரும் ஆறுதல் அடையவும், குருநாதரின் நல் ஆசி என்றும் எம்மை காக்கவும் அன்னை பத்திரகாளி அம்பாளின் பாதார விந்தங்களை பணிந்தேத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து குருமார் அமைப்பு
## HINDU PRIEST'S ASSOCIATION

(Reg No : HA / 04 / CBO / 140)
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwala, Sri Lanka.

எங்கள் அனைவரதும் அன்பிற்குப் பாத்திரமான தாத்தாவினது (பாலசுப்பிரமணிய குருக்கள் சண்முகரட்ணசர்மா) இறைபத செய்தி அறிந்ததும் மிகவும் வேதனையடைந்தோம். தாத்தா அவர்கள் அனைவரிடமும் எவ்வித வேறுபாடும் இன்றி ஒரே விதமாக அன்பாக பழகும் ஓர் பெருங்குணத்தினை கொண்டிருந்தார்கள். எங்கு எம்மைகண்டாலும் உடனே தம்பி என்னடா? எப்படி இருக்கிறாய்? வீட்டில் சுகமா? என அன்புடன் விசாரிக்க தவறுவதில்லை. இறுதியாக இரண்டு வாரங்களிற்கு முன்னர் ஓர் நிகழ்வில் கண்டபோது வழமைபோல் சுகம் விசாரித்துவிட்டு புறப்படும் சமயம் 2, 3 தரம் என்னை அழைத்து புறப்படப்போறன், புறப்படப்போறன் என வழமைக்கு மாறாக கூறியதன் அர்த்தம் இதுதானே என எண்ணத்தோன்றுகின்றது.

மேலும் இன்று நம் நாட்டில் அனுபவத்திலும் வயதிலும் மிக முதிர்ந்த சிவாசாரியாராக விளங்கி இன்று இறைபதம் அடைந்த குருக்கள் அவர்களது ஆத்மா சாந்தியடைய பரம்பொருளை வேண்டி நிற்பதுடன் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சமயத்தில் யாழ்ப்பாணம் இந்து குருமார் ஒன்றியத்தினரும், குருபீடாதிபதி அவர்களும் தங்களது அனுதாபத்தினை தெரிவித்து ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றார்கள்.

ஓம் சாந்தி


தலைவர் : சிவஸ்ரீ கு. வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள்
President: Siva Sri K. V. K. Vytheeswara Kurukkal
Tel: (+94) 11 2721671, 0777 349123.
E-mail : rishivikash212@yahoo.com

செயலாளர்: பிரம்மஸ்ரீ நா. கிருஷ்ணமோகன் சர்மா
Secretary: Brahma Sri N. Krishnamohan Sarma
Tel: (+94) 071 2870280



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT



# பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா அவர்களுக்கு
# எனது அஞ்சலி

பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா எனும் இலங்கை வாழ் இந்து மக்களின் அரும் பெரும் சேவையாளரை இழந்து விட்ட இந்த சூழ்நிலை ஈடுசெய்யமுடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையில் வாழும் அனைத்து அந்தணப் பெருமக்களுக்கும் உயரிய வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழ்ந்து சமயப் பற்றோடும், அக்கறையோடும் தமது 97 வருட வாழ்நாளினை சமயத்துக்காகவே அர்ப்பணித்து வாழ்ந்தவர் ஸ்ரீ சண்முகரட்ண சர்மா அவர்கள்.

நாட்டின் பல்வேறு பாகங்களுக்குச் சென்று எத்தனையோ மகோற்சவங்கள், கும்பாபிசேகங்கள், சமயம் சார்ந்த உற்சவங்களை நடத்தியுள்ளதோடு, ஆகமங்களிலும் வேதங்களிலும், கிரியைகளிலும் விற்பன்னராகத் திகழ்ந்தவொரு தலை சிறந்த சிவாச்சாரியார். தனது வயதையோ தேகாரோக்கிய நிலையையோ கவனத்தில் கொள்ளாது எம் சமய வளர்ச்சிக்காய் பாடுபட்ட இவரின் இழப்பு இந்துக்கள் ஒவ்வொருவரின் மனதையும் வருத்தத்துக்குள்ளாக்கியுள்ளது. தவிர்க்க முடியாத காரணங்களினால் அவரின் இறுதிக் கிரியைகளில் கூட கலந்து கொள்ள முடியாமல் போனதையிட்டு மிகுந்த வருத்தமடைகிறேன். அன்னாரின் மறைவால் துயரில் வாழும் தங்களுக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் அவரைச் சார்ந்த அனைத்து பெரியோர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடிவேல் சுரேஷ்
அதிமேதகு ஜனாதிபதியின் கூட்டிணைப்புச் செயலாளரும்,
பொதுசெயலாளர் பெருந்தோட்ட தொழிலாளர் காங்கிரஸ்,
பசறை தொகுதி ஸ்ரீ லங்கா சு. க. பிரதான அமைப்பாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE AMBASSADOR
OF THE
UNITED STATES OF AMERICA
Colombo, Sri Lanka

May 21, 2012

S. Radhakrishna Kurukkal
The Sri Bala Selva Vinayagar Moorthy Kovil
11/9 Captains Gardens
Maradana
Colombo 10.

Dear Swamiji:

I was terribly saddened to learn of the passing of your father and would like to express my deep sorrow at your loss. I consider myself to be quite fortunate to have met your father each time I came to the temple and I will cherish the memory of the blessing he gave me last Friday, when I came for the pooja.

With deep sympathy,

Sincerely,

Patricia A. Butenis

Patricia A. Butenis



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்”

1915ம் ஆண்டு பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ணசர்மா யாழ்ப்பாணம் நல்லூரில் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்கள் தம்பதிகளுக்கு மூத்த புதல்வராகப் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை வைத்தீஸ்வரக் கல்லூரியில் கற்றார். 1939ம் ஆண்டில் இருந்து கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகர் கோவிலில் பிரதமகுருவாக நியமிக்கப்பட்டு 73 ஆண்டுகள் பணிபுரிந்தார். பணிபுரியும் காலத்தில் குருக்கள் அவர்களின் பக்தி நிறைந்த பூசையால் விநாயகப் பெருமானின் திருவருள் பெருக பக்தர்களின் கூட்டம் பெருகியது. அதனால் விநாயக சதுர்த்தி, திருக்கார்த்திகை, கந்த சஷ்டி, பௌர்ணமி, விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை போன்ற உபயங்களை தாமே உபயகாரர்களை ஏற்படுத்தி மிகவும் பக்தி சிரத்தையோடு விழாக்களையும் வருடாந்த அலங்காரத் திருவிழாக்களையும் செய்து வந்தார். இவை எல்லாம் குருக்கள் அவர்களுடைய அன்பும், அடக்கமும். ஆளுமைக்கும் ஏற்றதாகும்.

மேலும் தற்போது விநாயகர் கோவில் மூலஸ்தானம் கருங்கல் திருப்பணிமூலம் புனரமைக்கப்பட்டு நிறைவடைந்து உள்ளது தொடர்ந்து மறய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நான் சென்ற வெள்ளிக்கிழமை 18ம் தேதி காலை கோவிலுக்குச் சென்ற வேளையில் குருக்கள் ஐயா அவர்கள் மிகவும் சந்தோஷமாகவும் எப்போதும் போல் உசாராகவும் அன்றயதினம் ஆலயத்திற்கு வந்த அடியார்களை வாழ்த்தி ஆசீர்வாதம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு எந்த நோயும் இல்லை. மறு நாள் மாலை குருக்கள் ஐயா இறந்து விட்டதாக கேள்விப்பட்டதும் நான் மிகவும் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன் என்னால் ஜீரணிக்க முடியவும் இல்லை.

ஐயா அவர்களின் ஆத்மா ஸ்ரீ பால செல்வவிநாயகரின் பாதார விந்தகளை அலங்கரிக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அவர் விட்டுச் சென்ற பணிகளை நாம் எல்லோரும் சேர்ந்து செய்வோம்.

சுபம்

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

மா. தவயோகராஜா
*ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் தேவஸ்தான*
*திருப்பணிச்சபைத் தலைவர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகரட்ண சர்மாவின் மறைவு

நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது

# இந்துசமயத் திணைக்களப் பணிப்பாளர் அநுதாபம்

இலங்கையின் மூத்த சிவாச்சாரியர்களுள் ஒருவராக விளங்கிய மருதானை கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் ஆலய பிரதம சிவாச்சாரியாரும், இலங்கையின் மூத்த அந்தண உத்தமருமான பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மாவின் மறைவு இலங்கை வாழ் இந்து மக்களுக்கு எவ்வகையிலும் ஈடு செய்ய முடியாத ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய ஒரு அந்தண சிரேட்டரை நாம் இனிக் காண்பது மிகவும் அரிதானது.

இலங்கை வாழ் அந்தணப் பெருமக்களுக்கெல்லாம் தந்தையாகவும் தலைவனாகவும் வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர் பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா அவர்கள். தமது 97 ஆம் வயது வரை நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் ஆயிரக்கணக்கான கும்பாபிஷேகங்களையும், மகோற் சவங்களையும் நடத்திய பெருமை அவருக்குண்டு.

அந்தணப் பெருமக்களக்குரிய அனைத்து ஆசார நியமங்களோடும் வாழ்ந்த இப்பெரியார் ஆலயங்களின் பூஜை கிரியைகளுக்கே முன்னுரிமையளித்து தமது வாழ்வை அர்ப்பணித்தவர். இந்து சமய வேதங்களிலும் ஆகமக் கிரியை முறைகளிலும் விற்பன்னராகத் திகழ்ந்து ஏனைய சிவாச்சாரியார்களுக்கு ஒரு முன்மாதிரியான குருவாக விளங்கியவர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் உருவாக்கப்பட்ட காலம் முதல் தமது இறுதிக்காலம் வரை திணைக்களம் தொடர்பான அனைத்து நிகழ்வுகளுக்கும் இயன்றவைர நேரிற் பங்கு கொண்டு தமது வாழ்த்துக்களையும் ஆசியையும் வழங்கிய பெருமை அவருக்கு உண்டு. இந்து சமய விவகாரங்களுக்கும் இத்திணைக்களத்துக்கும் பொறுப்பாக இருந்த முன்னாள் அமைச்சர்களான செல்லையா இராஜதுரை, பி.பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராஜ், டக்ளஸ் தேவானந்தா, அமரர் தி. மகேஸ்வரன் ஆகியோர் காலங்களில் நடத்தப்பட்ட சிறப்பான சமய விழாக்கள் மற்றும் வைபவங்கள் என்பவற்றுக்கு தவறாது பங்கு கொண்டு முழுமையாக தமது பங்களிப்பை வழங்கியவர்.

அவ்வாறே தேசிய ரீதியிலான நிகழ்வுகளுக்கு அழைக்கப்படும் போதும் தமது வயது, தள்ளாமை என்பவற்றையும் பொருட்படுத்தாது நேரில் பங்கேற்கும் ஒரு நற்பண்பை அவர் கொண்டிருந்தார். எவ்வேளையிலும் சிரித்த முகத்தோடு சிறியோர் பெரியோர் அனைவருக்கும் விபூதிப்பிரசாதம் வழங்கி தமது ஆசிகளை வழங்கும் உயர் பண்பை அவர் கொண்டிருந்தார்.

அத்தகைய உன்னதமான அந்தணப் பெரியவரின் இழப்பு இலங்கை வாழ் இந்து மக்களுக்கு ஒரு ஈடு செய்யமுடியாததாகும். அவரது மறைவினால் துயருறும் குடும்ப உறுப்பினர்களுக்கும் அவரது சமூகத்தைச் சார்ந்த பெரியோர்களுக்கும் எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


சாந்தி நாவுக்கரசன்

*பணிப்பாளர்*

*இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்*

*இல. 248, 1/1 காலி வீதி,*

*கொழும்பு-04*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

(இலங்கை இந்துமன்ற அமைப்புகளினதும் ஆலய நம்பிக்கை பொறுப்புகளினதும் கூட்டமைப்பு)


தலைவர்:
வி. கயிலாசபிள்ளை
தொலைபேசி: 2575566 (இல்லம்)
தொலைநகல்: 2575472
மின்னஞ்சல்
chairman@manithaneyam.org

பொதுச் செயலாளர்:
கந்தையா நீலகண்டன்
தொலைபேசி: 2580807 (இல்லம்)
2371100 (அலுவலகம்)
தொலைநகல்: 2371111
மின்னஞ்சல்: neela@mnlaw.lk

பொருளாளர்:
வே. கந்தசாமி
தொலைபேசி: 2586620 (இல்லம்)
மின்னஞ்சல்.
vkandasmi@gmail.com


ஈழத்து இந்து சமய வரலாற்றில் மறுதலிக்கமுடியாத ஓர் இடத்தை பெற்ற வரலாற்று நாயகர் சிவஸ்ரீ சண்முகரட்ணசர்மா. அர்ப்பணிப்புடன் செயற்பட்ட சிவாச்சாரியார் பெருமகனின் பன்முகமான ஆன்மீகப் பணிகள் கப்பித்தாவத்தை புண்ணியபூமியிலிருந்து ஊற்றுப்பெற்று நாடெல்லாம் பாரெல்லாம் பரந்து நின்றன.

புலமை, ஒழுக்கம், பண்பு, பக்தி, அன்பு யாவும் ஒருங்குதிரள அந்தணர் குலத்திற்கு இலக்கணமாக வாழ்ந்த பெரியவர். வடமொழிப் புலமையிலும் ஆகமக்கிரியை நெறிகளிலும் ஆழ்ந்த அனுபவமும் அறிவும் மிக்க கலங்கரை விளக்காக எமது இந்து சமூகத்தை வழிநடத்திநின்ற சிறப்பிற்குரியவர்.

சந்தேகங்களைத்தெளிவுபடுத்தும் ஆற்றலும், கிரியைகள் கூறும் தத்துவங்களை எடுத்தியம்பும் ஆழ்ந்த அறிவும் நிறைந்த அறிஞர் பெருமகன் எங்கள் சண்முகரட்ணசர்மா ஐயா. பிரதம குருவாயமர்ந்து கிரியைகளையும் அபிஷேகங்களையும் கவனமாக திரிகரண சுத்தியோடு செய்து வந்த அவரின் மாட்சி அவரை எல்லோரும் போற்றும் தலைமைக் குருவாக உயரவைத்தது. அவரின் அறிவின் ஆழத்துக்கும் அகலத்திற்கும் அளவுகோலே கிடையாது. அவரின் சிறப்பைப்பற்றி போற்றுகின்றமையை பல ஆண்டுகளாகச் சிறியேன் கேட்டறிந்தது மட்டுமல்லாமல், வயதுமுதிர்ந்த காலத்திலும் அக்கறையுடன் நிதானமாகவும் தளம்பாத நிறைகுடமாகவும் அவர் எங்களை ஆசீர்வதித்து வந்தமையை நினைந்து மனம் நெகிழ்கிறேன்.

அவர் என்றும் இந்து சமயத்தின் பெருமையைப் பறைசாற்றி இந்த நாட்டில் சிவாச்சாரியார்களின் சிறப்பிற்கு வித்திட்ட புகழ்பூத்த பெருந்தகை என்பதை இன்றைய சந்ததியினர் மறக்கக் கூடாது – அதனை உணர்ந்து அவர் வழிநின்று வாழ்ந்துயர வேண்டும். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய புருஷரின் வழிகாட்டில் எல்லோரும் நடந்தால் அதுவே அமரருக்கு நாம் செலுத்தும் சிறந்த – உகந்த அஞ்சலி.

அவருடைய ஊன், உடம்பு மறைந்தாலும் அவர்தம்புகழ் என்றும் நிலைத்திருக்கும். **"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்"** என்ற வள்ளுவன் தந்த திருக்குறள் அடிகளுக்கு அமைய ஐயாவின் புகழ் என்றும் இறவாது நிலைத்து நிற்கும். எங்கும் வெளியிடத்திலும் திருநீறு பூசி தன் திருக்கரத்தால் எங்களை வாழ்த்திவந்த, இந்து சமுதாயத்தின் மகான் இன்று இல்லை என எண்ணிப்பார்க்கவே என் உள்ளம் மறுக்கின்றது.

கப்பித்தாவத்தை ஸ்ரீ பாலசெல்வ விநாயகருக்கே தன்னை அர்ப்பணித்து நின்ற சிவாச்சாரியாரின் வாக்கிலே இனிமை இருக்கும். அவரின் உள்ளத்தில் என்றும் அன்புபெருக்கெடுத்தோடும் முகத்தில் என்றும் அருள் ஒளி பிரகாசிக்கும். எல்லோரையும் வாழ்த்தி வாழ வைக்கவே வாழ்ந்து கொண்டிருந்தார். அது தான் ஆண்டவன் அவருக்கு நெடுங்கால வாழ்வு தந்திருந்தார். இன்னும் அவர் வாழ்ந்து எங்களை வாழவைத்திருக்கலாம். என்பதே எங்களின் ஏக்கம்.

அந்தப் புனித புருஷரின் ஆத்மா இறையடி சேர்ந்து சாந்தியடைய ஸ்ரீ சிவகாமிசமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்
இறை பணியில்

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்
அகில இலங்கை இந்து மாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரிலே அறிஞர் வரிசையில்
நற்பெரும் சைவத் தொருவராய்
உளம் மகிழ்ந்திட உலகம் போற்றிட
ஒப்பில்லாத் திருஞானத்தால்
வளமிரும்தான் ஞாயறிவிலினும் வாழவிரும்
உலதோர் நோக்கிலும்
தளம் நிறைந்திடக் கால் பதித்தவர்
தக்கவர் சண்முகரட்ணசர்மா நாதனே

நெற்றியில் நீறும் சந்தனப் பொட்டும் நிறைய
கழுத்தில் உருத்திராக்க மாலையுமாய்
பற்றுடை நல்ல உடையுமாய் பளிச்சிட
சுற்றும் சால்வையும் பெற்றவர் யாவர்க்கும் பிரியமானவர்
பெருங்குண சண்முக ரத்தின சர்மா நாதனே
முற்றிலும் காசி யாத்திரையையும் முடித்து
வந்தவர் மூத்தவ அந்தணர்

கோயிலே தனது உயிராகக் கொண்டே
கப்பித்தாவத்தை ஸ்ரீபால செல்வ விநாயகரை
வாயில்கள் தோறும் வலமுற வந்தும் வைசி
மோதை மன்னியும்
நேயமாயாங்கே அகவ் ஒதியும் நிகரா உரை சொல்லியும்
நாயன்மார் போல் வாழ்ந்து காட்டினார் நன்
மகன் சண்முகரட்ணசர்மா நாதனே.

விஸ்வ நாதா சிவரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



“கந்ததாஸ் சிற்பாலயம்”

**KANTHATHAS SITPALAYAM**

ஆலய கட்டிட நிர்மாண, சிற்ப, வர்ண வேலைகள் ஒப்பந்தக்காரர்
“சிற்பகலாபானு” ஸ்தபதி கந்ததாஸ் இரவீந்திரராஜா (அராலியூர்)

*Contractor of Construction of Temple Buildings and "Sculptural and Art" work*
*"Chirpakalabhanu" Sthapathy Kanthathas Raveenthirarajah (Araly)*



60/33, ஸ்ரீ பன்னானந்த மாவத்தை
கொழும்பு 15.

*60/33, Sri Pannananda Mawatha,*
*Colombo-15.*

# நடமாடும் தெய்வம்

செந்தண்மை அந்தணராய் சிறந்தோங்க
சீர்மேவு விநாயகரின் பணியேற்று
ஆகமங்கள் கற்றுணர்ந்த அந்தணராய்
ஆலயங்கள் எல்லாம் அருள்சேர
திருமேவும் இலங்கையின் மூத்தகுருவாக
திசையெல்லாம் புகழோடு வலம்வந்து
மங்களவிழாக்களில் மகரிஷியாய் வலம்வந்து
மண்ணுலகம் போற்றும் மஹா குருவே
நடமாடும் தெய்வமென நாம் துதிக்க
நடராஜன் பாதம் சென்றாயோ எம்குருவே

**ஓம் சாந்தி...... ஓம் சாந்தி...... ஓம் சாந்தி.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்மை மிகு சண்முகரட்ணசர்மா அவர்களின்

## சிவபதப்பேறு குறித்து அவரின் மேலான

# நினைவு அஞ்சலி

## வெண்பா

அந்தணர் குலத்திற்கு, அணிகலமாய் மலைவிளக்காய்
ஐங்கரனார் அருளுக்குப் பாத்திரமாய் – பெருஞ்சிறப்பாய்
பெரும் பதவிசேரப் பெருவாழ்வு வாழ்ந்த உத்தமனே
பாலசெல்வ விநாயகரின் பாதமலர் திண்ணம் உமக்காம்அறி

இடம் பெயர்ந்த வாழ்வில் இன்முகம் காட்டி
அன்போடு அரவணைத்த குரு நாதா – பெருமை மிகு
கப்பித்தாவத்தையிலே பிள்ளையாரின் அருட்சிறப்பு மேலோங்க
காலான குருமணியே உங்கள் ஆன்ம சாந்தி திண்ணம் அறி

இளவயதில் பிள்ளையாரின் பூசகராய் சேர்ந்து
அருள் சேரப் பெரும் பூசை ஆற்றி – மனங்குளிர
மக்களுடன் மகிழ்வாக அன்போடு பண்பாகப் பழகி
ஆலயத்தை வளர்ச்சியுறவைத்த தெய்வமே ஆன்ம சாந்தி திண்ணம் அறி

பிள்ளையாரைப் பிள்ளையென மனம் நினைந்து பக்குவமாய்
தள்ளாத வயதினிலும் பூசை முறை தப்பாது – அருட்சிறப்பாய்
மனமுருக மனமாரச் செய்த மாதவனே
உன் முத்தி உள்ளங்கை நெல்லிக் கனி அறி

கொழும்பு மாநகரில் வாழ்கின்ற பெரியோர்கள் பக்தர்கள்
அனைவரதும் மனங்கவர நடந்து – ஆலயத்தின்
வளர்ச்சிக்காய்ப் பெரும் பணிகள் செய்து அடியவர்க்கு
மனங்குளிர அருளாசி கொடுத்தவரே முத்தி திண்ணம் அறி

ஆலயத்தின் உற்சவங்கள் அனைத்தையுமே சிறப்பாக
நிறைவோடு மங்களமாய் வழிநடத்தி – அனைவரதும்
பாராட்டைப் பெற்று பார் போற்ற வாழ்ந்தவரே
கப்பித்தாவத்தையான் கழலிணைகள் தங்களுக்காம் அறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் குலத்திற்கு அரும் பெருமை சேர்த்து
அதி உயர்ந்த பதவிகள் பட்டங்கள் பெற்று – கணபதியை
கணமும் மறவாது கையெடுத்து அருள் பெருக்கி, அதனாலே
பலபேரை உயரவைத்த உத்தமனே முத்தி திண்ணம் அறி

கப்பித்தாவத்தை யென்றால் தங்களையே நினைக்கும் படி
செயற்கரிய கருமங்கள் பலசெய்து – இவ்வுலகில்
பல்லாண்டு காலம் பக்குவமாய் வாழ்ந்த குருநாதா
உம் முத்தி திண்ணம் கைலாச நாதன் கழலிணையில் அறி

அன்பான அடியவர்கள் கலைஞர்கள் கற்றுணர்ந்தோர்
துன்பத்தால் நலிவுற்று நாடி வருபவர்கள் – மனங்குளிர
அருளாசி கூறி வேண்டும் நிலையறிந்து உதவி
கைதூக்கி வழிகாட்டி நின்ற பெரியோனே முத்தி திண்ணம் அறி

இல்லறமாம் நல்லறத்தை இனிதாய் நடத்தி வந்து
நல் மக்கள் பலரைப் பெற்றெடுத்து – சிறப்பாக
உயர்வோடு அனைவரையும் வாழவழிவகுத்தவனே
புத்திரர்கள் சிறப்பாலே முத்தி திண்ணம் அறி

இடம்பெயர்ந்த வாழ்வினிலே அடியேன் தினம் வந்து
மனமாரப் பாடிப் பணிந்து தொழ – மனம் விரும்பி
அருள்சேர்ந்த பிரசாதம் அன்போடு காளாஞ்சி
மனமாரத்தந்த மாதவனே உன்முத்தி திண்ணம் அறி

எல்லாம் நிறைவாக சிறப்பாக இருக்க விநாயகரின்
குடமுழுக்கு நிறைவுபெறாத்தன்மை – தங்களுக்கு
மனதில் குறையாகும் ஆனால் ஐங்கரன் அருளாலே
நிர்வாகம் திண்ணம் குடமுழுக்கை நிறைவாக்கும் முத்தி திண்ணம் அறி

பிறந்தவர்கள் யாபேரும் எப்படியோ ஒருநாள்
இறைபதத்தை அடைந்திடுவர் இது திண்ணம் – இதை உணர்ந்து
குருநாதன் இப்புவியில் பல்லாண்டு வாழ்ந்தசெயல்
இறைவன் செயலென்று அவர் முத்திக்காய் கையெடுப்போம் அடிபணிவோம் தினம்

இங்ஙனம்
உள்ளத்தாலும் உணர்வாலும் அன்பு மறவாத பேரன்பன்
**வ. சிவநேசன்**
மானிப்பாய் வீதி, உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கப்பித்தாவத்தை விநாயக பெருமானின் திருவடி அடைந்த சிவாச்சாரியமணி சிவஸ்ரீ. பா. சண்முகரத்தினசர்மா அவர்களின்

# வாழ்க்கைப் பாதையில்

சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமான் பிறந்த யாழ் நகரில் உள்ள நல்லூரில் பாலசுப்பிரமணியக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் சாரதா அம்மா அவர்களுக்கும் சிரேஷ்ட புதல்வனாக 6.11.1915 இல் பிறந்தார்.

இவர்தமது கல்வியை யாழ் / திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றார். இவர் சிதம்பரசாஸ்திரிகளிடம் சமஸ்கிருதக் கல்வியைக் கற்றார். பின்னர் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் தேவஸ்தானப் பணியில் ஈடுபட்டார்.

பின் யாழ்ப்பாணம் சென்று தேவஸ்தானப் பணியில் ஈடுபட்டு வந்தபோது இவரது தந்தையார் இறைவனடி சேர்ந்தார். அதன் பின் தாயாருடன் கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயப் பணிக்கு அழைக்கப்பட்டார்.

இவர் 1942 ஆண்டு இராஜலட்சுமி அம்மாளைக் கரம்பிடித்து திருமணம் முடித்த பின் 8 ஆண் குழந்தைகளும் 3 பெண்பிள்ளைகளும் பிறந்தனர்.

இவரின் மனதில் குடிகொண்டுள்ள ஆசை என்னவென்றால் விநாயகப் பெருமானின் புனர்நிர்மாணப் பணிகள் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற்று முடிய வேண்டும் என்பதே ஆகும்.

இவருக்கு முன்னாள் அமைச்சர் தேவநாயகம் அவர்களினால் முதன் முதலாவது ஜே. பி பட்டம் வழங்கப்பட்டது.

இவருக்கு 2009ம் ஆண்டு தற்போதைய மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களினால் தேசமாணிப் பட்டம் வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவருக்கு 27 பேரப் பிள்ளைகளும் 15 பூட்டப்பிள்ளைகளும் விநாயகப் பெருமானின் திருவருளால் கிடைத்தது. இவர் 70 ஆண்டுகளாக விநாயகப் பெருமானுக்கு தொடர்ச்சியாகப் பூசை செய்து தனது 97வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

குப்பிளான் அருளானந்தம்
(கொ/தொண்டர் வித்தியாலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்பூக்கள்

**ச** – சத்தியவழியில் தர்மம் காத்த செம்மலே

**ண்** – இன்முகமே சண்முக வடிவே உன்தோற்றம்

**மு** – முத்தான நல்வைரம்

**க** – கருணை நிறை உள்ளமே

**ர** – ரத்தினமே

**த்** – சித்தத்தின் இன் அமுதே

**தி** – தித்திக்கும் தேன் அமுத கடலே

**ன** – இனங்களின் ஒற்றுமை சிகரமே

**ச** – சங்கரன் மைந்தன் கணபதி அடிபரவிய அருள்மணியே

**ர்** – கர்மவீரமணியே

**மா** – மா மனித நேயதன்றோ

சண்முகரத்தினசர்மாவே ஆயிரம் பிறைகண்ட
அந்தண கோமணியே எம்மதமும் சம்மதமாய்
மதங்களை கடந்து அன்பு உள்ளங்களில்
பூத்த பூசுரசிரோன்மணியே
கண்ணீரில் பூக்களாய் அன்பில் பணிகின்றோம்.
ஆடலரசன் அம்பலவாணன் அடிகமலம்
மேவி நித்திய பேரின்பம்துய்க்க
கற்பிகாவத்தை சித்தி விநாயகன் திருவருள் பொழிய
இறைஞ்சுகின்றோம் எப்போதும்
அடிபரவி மலர்தூவிய அந்தண சிரோன்மணி
நாமம் புவி உள்ளவரை மண்ணில்
நிலைத்துரங்கவே

கண்ணீரில்
கவிவடிவம்
மாவை வி. சோமசுந்தரம்

கண்ணீரில்
கரையும் அன்புள்ளங்கள்
தந்தை செல்வாநற்பணி
மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள ஐயா

அன்பைப் பகிரும் ஐயா – நல்ல
அறிவையூட்டும் ஐயா – அவர்
சாதனைகள் சொல்லச் சொல்ல
அங்கம் சிலிர்க்குதே

தினந்தோறும் சிறந்தவராய் வாழ்ந்து வந்தாரே
என்றும் சான்றோரை மதித்து அவர் வாழ்ந்து வந்தாரே
அவர் கடமைகளை முடித்தவுடன்
அனைவருக்கும் இறைவனானாரே

சிவரூபன் பிரணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியுமா பெரியய்யாவை.

"பெரியய்யா" என அன்போடு எல்லோராலும் அழைக்கப்படும் கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் ஆலயத்தின் பிரதம குரு மதிப்புக்குரிய "ஐயா" வை எங்களால் மறக்க முடியுமா? தள்ளாத வயதிலும், எத்தனை நோய்கள் வந்தாலும், எதையும் பொருட்படுத்தாது ஆலயத்துக்கு வந்து தன்னால் இயன்றளவு தன் பிள்ளையைப் போன்று பிள்ளையாரை பிள்ளைபோல் கவனித்து, ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்கும் பெரியய்யாவை இனி எங்கே காணப்போகிறோம். அவர் மறைவைக் கேள்வியுற்று அவரில்லம் நாடிச் சென்று பார்த்தபோது, சொல்லமுடியாத அளவு மனம் அழுதது.

ஒவ்வொரு வருடப் பிறப்பன்றும் கோவிலுக்கு செல்லும் போதும், "கௌரி" என அழைத்து புத்தம் புதுக் காசுகளை தந்து, மனம் நிறைய வாழ்த்துவாரே! இந்த வருடம் கூட அவரால் முடியாத பட்சத்திலும் ஆலயம் வந்து தன் அன்பான நெஞ்சங்களுக்கு கைவிசேஷம் கொடுத்து வாழ்த்தியதை யாரால் மறக்க முடியும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஏதாவதொரு பிரசாதம், ஒன்றும் இல்லாவிட்டால், ஒரு மோதகம் என்றாலும் காளாஞ்சியில் வைத்து கௌரிக்கும் பிள்ளைகளுக்கும் என்று சொல்லி கொடுத்துவிடுவாரே! மறக்க முடியுமா?

என்னுடைய ஒவ்வொரு பக்திப்பூக்கள் புத்தகத்தையும் பெற்றுக் கொண்டு, பூசையில் வைத்து, எடுத்து, முதல் காசு தந்து என்னை ஆசீர்வதிக்கும் பெரியய்யாவை மறக்க முடியுமா? இத்தனைக்கும் மேலாக ஒருநாள் எங்கள் அச்சகத்துக்கு, இரண்டு மாடிப் படியேறி வந்த ஐயாவைக் கண்டு துடித்துப் போய்விட்டோம். மூச்சுவாங்க எம் முன்னால் அவர் நின்றது எம்மை கலங்க வைத்துவிட்டது. ஆலய கும்பாபிஷேகத்தை மிக விரைவில் முடித்து வைக்க ஆவன செய்யும்படி அவர் மனமுருக கேட்டுக் கொண்டதை இன்று நினைத்தாலும், ஐயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகத்தைப் பார்க்காமல் போய்விட்டாரே என்ற கவலை எம்மை விட்டு என்றும் அகலாது.

அன்று அவர் கண்கலங்கியதை எப்படி மறக்க முடியும். அன்பான ஐயா, பாசமான ஐயா... ஆலயத்தில் எம்மைக் கண்டதும் ஓடிவந்து வீபூதி, குங்குமம், தீர்த்தம் தந்து ஆசிவழங்கும் பெரியய்யாவை அன்று கண்டபோது, திடீரென அவர் எழுந்து வரமாட்டாரா என்று ஒரு சிறு ஆசை என் மனதில் எழுந்தது. அவருடைய வெற்றிடத்தை யாரால்தான் நிறைவு செய்ய முடியும்.

எங்கள் பெரியய்யாவை எங்களால் மட்டுமல்ல, அவருடைய அன்பான பக்தர்களால் என்றும் மறக்க முடியாது. விரைவில் ஆலய கும்பாபிஷேகம் நடப்பதன் மூலம், அவருடைய பெரிய ஆசை நிறைவேறி, அவருடைய ஆத்மா சாந்தியடைய பால செல்வ விநாயகரைப் பிரார்த்திக்கிறோம்.

**சக்தி கௌரி விமலேந்திரன்**

*மோட்சமென்பது வேறு எதுவும் இல்லை*
*மன அமைதி அதன் மூலம் செயலில் அமைதி*
*இதனால் வாழ்க்கையில் அமைதி*
*இந்த அமைதியையே எல்லா வேதங்களும்*
*ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி ! என முழங்குகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

**பெ**ருமதிப்பிற்குரிய எங்கள் அன்புத் தெய்வம் பா.சண்முகரட்ண சர்மா அவர்களின் பிரிவுச்செய்தி அறிந்தவுடன் எம் துயரில் பங்கு கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

அனுதாப ஆறுதல் மொழிகளை நேரிலும் தொலைபேசி மின்னஞ்சல் வாயிலாக தெரிவித்தவர்களுக்கும் மலர் மாலைகள் மலர் வளையங்கள் ஆகியவற்றை அளித்து அன்னாரை பெருமைப் படுத்தியவர்களுக்கும் நன்றி

இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய சிவாச்சாரியார்கள் ஆலய தர்மகர்த்தாக்கள் நிர்வாகிகள் பிறமத தலைவர்கள் ராஜதந்திரிகள் கலைஞர்கள் வர்த்தக பிரமுகர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மருத்துவர்கள் மற்றும் சமூகத்தினர் அனைவருக்கும் எமது நன்றி.

கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களையும் நினைவு மலரையும் அச்சிட்ட Unie Arts நிறுவனத்தினருக்கும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அன்னார் பற்றிய செய்தித்தொகுப்புக்களை வெளியிட்ட ஊடகங்களுக்கும் மற்றும் சக்தி, ரூபவாஹினி(நேத்ரா), வசந்தம், கனடா TVI தொலைக்காட்சி சேவைகளுக்கும் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், சக்தி FM, CMR FM 101.3 ஆகிய வானொலிகளுக்கும் எமது நன்றி.

இறுதிக் கிரியைகளை உரிய முறையில் செய்து வைத்த சாஸ்திரிகளுக்கும் உதவிபுரிந்தவர்களுக்கும் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மேலாக தங்களுக்குள் முறை வைத்து உணவு வழங்கியவர்களுக்கும் தசாகம் போன்ற சம்பிரதாய கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் நன்றி.

**பிள்ளைகள் மருமக்கள்**
**மற்றும்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org